பக்கங்கள்:- பத்து

Registered as News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

வலம்புரி

VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி 14 | புதன்கிழமை (28.05.2003) | தொலைபேசி ~ 2223378 | ஒலி 160

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில்
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

பலாலி தவிர்ந்த உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியிருக்க ஆட்சேபனை இல்லை!



தமிழ் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்குவேன் அமைச்சர் மகேஸ்வரனிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனோ,விடுதலைப் புலி உறுப்பினர்களோ எனது தனிப்பட்ட எதிரிகள் அல்லர்.அரசியல் பிரச்சினைகள் தான் இப்படியான தொரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை அமைச்சர் மகேஸ்வரன் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து,தமிழ் மக்களின் பல பிரச்சினைகள் குறித்து விரிவாகப் பேசியுள்ளார்.இச் சந்திப்பின் போது ஜனாதிபதி மேலும் தனது கருத்துக்களை தெரிவிக்கையில்,

(10ம் பக்கம் பார்க்க)

இந்திய இராணுவம் நேற்று யாழ்.வந்தது!

படை அதிகாரிகளுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தின் உயர் அதிகாரிகள் குழுவொன்று நேற்றுக் காலை திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

பலாலியில் இருந்து உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வந்திறங்கிய இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் உள்ள 512வது படையணித் தலைமையகத்தில் முக்கிய மாநாடொன்றை நடத்தியதாகத் தெரிய வருகிறது. சுமார் அரை மணிநேரம் வரை நடை பெற்ற இரகசிய மாநாட்டில் பொது மக்களின் வாழ்விடங்களில் உள்ள இராணுவத்தினரை வெளியேற்றுவது தொடர்பாகவும், அவ்வாறு வெளியேற்றப்படும் இடங்களில் மக்கள் மீளக்குடியமர்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக தகவல அறிந்த வட்டாரங்கள் செய்தி

(10ம் பக்கம் பார்க்க)

எரிக்சோல்ஹெய்ம் இன்றே வன்னி செல்வார்

பிரதமரின் பதில் பக்ஸ் மூலம் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் இன்று விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்காக வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நேற்று அவர் வன்னிக்கு விஜயம் செய்வதாக திட்டமிடப்பட்டிருந்த போதும் இறுதி நேரத்தில் அவ் விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கைக்கு அரசாங்கத்தின் பதிலைத் தெரிவிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கடிதம் தூதுவர் எரிக்சோலிடம் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தினாலேயே வன்னி விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் பிரதமரின் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான முடிவில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தினாலேயே கடிதம் ஒப்படைப்பதில் கால தாமதம் ஏற்பட்டதாக அத்தகவல்கள் உறுதி செய்கின்றன.

இதேவேளை பிரதமரின் முடிவை தெரிவிக்கும் கடிதம் நேற்று மாலை விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமையகத்திற்கு பக்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

புலிகளின் கோரிக்கைக்கு அரசு இணங்க வேண்டும்

நோர்வேப் பிரதமர் கருத்து

(ஓஸ்லோ)

தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று விடுத்துள்ள கோரிக்கையை இலங்கையரசு இணக்கத்துடன் கூடிய பதில் அளிக்க வேண்டும் என்று நோர்வேப் பிரதமர் ஹெல்மானே பொன்டிக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நோர்வேத் பிரதமர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எதிர்த்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள போதும் பேச்சுவார்த்தையை முன்னின்று நடத்துகின்ற அதிகாரம்

(10ம் பக்கம் பார்க்க)

கூட்டணித் தலைமையை மாற்ற புலிகள் முயற்சிக்கவில்லை!

சு.ப.தமிழ்ச்செல்வன் பேட்டி

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையை மாற்றுமாறு விடுதலைப புலிகள் கூறியுள்ளதாக வெளிவந்த செய்தியை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மறுத்துள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசியல் கட்சிகளுடைய செயற்பாடுகளில்,தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தலையிடுவதில்லை எனினும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை தொடர்பாக ஏற்பட்டுள்ள சர்ச்சை பத்திரிகைகளில் வெளிவந்ததையடுத்தே எனக்குத் தெரியவந்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் எழுந்துள்ள மாற்றுக் கருத்துக்கள் தொடர்பாக அக்கட்சியினரே முடிவு செய்ய வேண்டும்.

மீண்டும் ஓர் போருக்கு திரும்புவதற்கான அறிகுறிகள் தென்பட்டாலும் விடுதலைப் புலிகள் போருக்குத் திரும்பமாட்டார்கள்.சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைககுத்

(10ம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு உதவியை புலிகளுடன் இணைந்து பயன்படுத்த அரசு தயார்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதியை விடுதலைப் புலிகளுடன் இணைந்து பயன்படுத்த அரசாங்கம் தயாராக இருக்கிறது.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுத் முன்தினம் தெரிவித்துள்ளார்.நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிச்சோல்ஹெயம், பிரதமரின் உத்தியோக பூர்வவாசஸ்தலமான அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடிய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று வன்னியில் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிப்பதற்காக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கடிதத்தைப் பெற்றுக் கொள்ளவே நேற்று முன்தினம் எரிக்சோல் ஹெய்ம் பிரதமரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இச்சந்திப்பின் போது பிரதமர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,யப்பானின் தலைநகர் டோக்கியோவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கின்ற நிதிவழங்கும் மாநாட்டில்,கிடைக்கும் நிதியினை விடுதலைப் புலிகளுடன் இணைந்து, வடக்குக் கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு விடயங்களுக்குப் பயன்படுத்த அரசு தயாராக இருக்கின்றது.

மேலும் விடுதலைப் புலிகளுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்குவதற்கும் அரசாங்கம் தயாராக

(10ம் பக்கம் பார்க்க)

5-ம் தரப் புலமைப் பரீட்சை டிசம்பரில் நடக்கும்

(கொழும்பு)

இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருந்த 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை டிசம்பர் மாதத்திற்கு பிற்போடுவதற்கு கல்வி அமைச்சர் கருணா சேனா கொடித்துவக்கு தீர்மானித்துள்ளார்.

தென் பகுதிகளில் இடம் பெற்ற மணசரிவு,வெள்ளப் பெருக்கு ஆகியவற்றினால் சுமார் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதையடுத்தே கல்வி அமைச்சர் இத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சனி, வியாழன், ராகு, கேது மாற்றங்களால் ஏற்படும் பொதுப் பலனை அறிந்து கொள்ளுங்கள்!

சனிமாற்றம் (22.05.2003) பொதுப் பலன்கள்

22.05.2003இல் சனி இடபராசியில் இருந்து மிதுன ராசிக்கு மாற்றமடைந்து இரண்டரை வருடங்கள் வரை மிதுனத்திலேயே சஞ்சாரம் செய்யும்.

23.07.2003 இல் வியாழன் கடக ராசியில் இருந்து சிங்க ராசிக்கு மாற்றமடைந்து ஒரு வருடம் வரை சிங்க ராசியிலேயே வியாழன் சஞ்சாரம் செய்யும்.

14.08.2003இல் இராகு, கேதுக்கள் இடபம், விருட்சிகத்தில் இருந்து முறையே மேடம், துலாம் இராசிகளுக்கு மாற்ற மடைந்து ஒன்றரை வருடங்கள் வரை அவ ராசியிலேயே சஞ்சாரம் செய்யும். இக்கிரக மாற்றத்தினால் இவ்வருடம் இலங்கையில் அரசியல், இராணுவ, சமூக, பொருளாதார மாற்றங்கள் உண்டாகும்.

சிங்கம்:

(மகம், பூரம், உத்திரம், 1-ம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்த சிம்மராசியினருக்கு 22.05.2003 முதல் 26.06.2005 வரை சனி பகவான் இலாபஸ்தானம் எனும் 11ல் இருப்பார்)

எதிரிக்கு சிம்ம சொப்பனமாக விளங்கும் சிம்ம ராசி நேயர்களே! கடந்த 21/2 வருட காலமாக சனி பகவான் உமது ராசிக்கு 10ல் சஞ் சாரம். இது கர்ம ஸ்தானம் ஆகும். கடன் குறைந்தது. தந்தை மூலம் தனலாபம் கிடைத்தது. உழைக் கவும் உற்சாகமாக வேலை வாங் கவும் தெரிந்ததால் அது உமக்கு உதவிக்கரமாக இருந்தது.

தற்காலம் சனி பகவான் லாப ஸ்தானம் என்னும் 11ல் வருவதால் பகை விலகும். கணவன் மனைவி இடையில் சந்தோசம் கூடும். மூத்த சகோதர வழியில் உதவிகள் கிடைக் கும். சிலருக்கு தொழில் வழியில் முன்னேற்றம் கிட்டும். தனது 3,7,10 ஆகிய பார்வையினால் உமது ராசிக்கு 1,5,8 ஆகிய வீடுகளை பார்வை செய்வார்.

சனி பகவானின் 3வது பார்வை யினால் உமது ஜென்மராசியை பார்வை செய்வதால் உடல் நலனில் கவனம் தேவை. கூட்டாளிகளிடம் சற்று விட்டுக் கொடுத்துப் போவது நலம். கணவன் மனைவி உறவில் அவ்வப்போது ஊடலும் கூடலும் உண்டாகும்.

சனி பகவானின் 7வது பார்வையி னால் உமது ராசிக்கு 5வது வீட்டைப் பார்வை செய்வதால் கருவுற்ற மாதர்கள் கவனமுடன் இருப்பது நலம். உயர் கல்வி பயில்வோர் எச்சரிக் கையுடன் காரியத்தில் கவனமாக செயற்பட நன்று. அம்மான் வகையின ருடன் மனஸ்தாபம் வர இடமுண்டு.

சனி பகவானின் 10 வது பார்வை யினால் உமது ராசிக்கு 8வது வீட்டை பார்வை செய்வதால் 6க்குடை யவர் 8ம் வீட்டைப் பார்ப்பது சிறப்புத் தான். இதனால் கடன் தீரும். வழக்கில் வெற்றி கிட்டும். புதிய முயற்சிகளில் திடீர் திருப்பம் உண் டாகும்.

வியாபாரிகளுக்கு: உணவகம், திரையரங்கம், அழகுசாதனக் கடை, திரைப்பட விநியோகம், குடிநீர் விநியோகம், பியூட்டிப் பார்லர் போன்ற பிரிவினர் ஏற்றம் காண இடமுண்டு. நல்ல பணியாட்கள் அமைவர்.

விவசாயிகளுக்கு: பணப் பயிர் அமோக விளைச்சல் தரும். தண்ணீர்ப் பஞ்சம் விலகும். விவசாய உபகரணம் வாங்க சிலருக்கு அரசு வங்கி மூலம் நிதியுதவி கிட்டும். சிலர் மனைவி பேரில் புதிய பூமி வாங்குவர்.

பெண்களுக்கு: புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம கிட்டும். எனினும் கருவுற்ற தாய் மார்கள் கவனமுடன் இருப்பது நலம். குறிப்பாக கடினமான வேலைகளை செய்யாமல் இருப்பது நலம்.

உத்தியோகஸ்தர்களுக்கு: சுற்றுச் சூழல், தணிக்கை, மக்கள் தெடர்பு, திட்ட அமுல், விவசாயப் பண்ணை, பால் பண்ணைகள், அணைக்கட்டு, நர்ப்பாசனம் போன்ற துறைகளில் பணி புரிவோர் ஏற்றமடைவர். வேலைப்பழு கூடும். உயர் பதவியில் அமர வாய்ப் புத தேடி வரும்.

மாணவர்களுக்கு: என்.எஸ்.எஸ், பாதுகாப்புக் கல்வி, விளையாட்டு, சிவில் எஞ்சினியரிங், விவசாயம், மண்பரிசோதனை, ஆக்கிரெக்ட் போன்ற பிரிவுகளில் பயில்வோர் ஏற்றம் அடைவர். சிலர் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் தேர்வுக்குத் தயாராகலாம்.

கலைஞர்களுக்கு: உடைய லங்காரம், மக்கள் தொடர்பு, அவுட் டோர் யூனிட், மின்சார யூனிட், நடிப்பு, கிராபிக், ஸ்டன்ட் போன்ற பிரிவினர் ஏற்றம் பெறுவர். அதிக கடினமான வேலைகளை ஏற்றுச் செய்ய நேரும்.

குருபகவான் சஞ்சார பலன்

22.07.2003 வரை குரு பகவான் உமது ராசிக்கு 12ல் சஞ்சாரம். இதனால் குடும்பத்தில் சுப செல வுகள் வரும். சேமிப்பு கரையும். மகன் அல்லது மகள் படிப்புச் செல வுகள் கூடும்.

23.07.2003 முதல் 14.08.2004 வரை குருபகவான் உமது ஜென்ம ராசியில் சஞ்சாரம். இதனால் ஸ்தான பேதம் உண்டாகும். சிலர் வெளி நாட்டில் சென்று ஜீவனம் புரிய நேரும்.

15.08.2004 முதல் 13.05.2005 வரை குருபகவான் உமது ராசிக்கு 2ல் சஞ்சாரம். இதனால் வாக்கி னால் வளமும் நலமும் சேரும். உமது மகன் அல்லது மகள் வேலை வாய்ப்பினை பெறுவதற்கு இடமுண்டு.

14.05.2005 முதல் குருபகவான் உமது ராசிக்கு 3ல் சஞ்சாரம். இதனால் தூர தேசத்திலிருந்து நற் செய்திகள் வரும். இளைய சகோதர வழியில் ஏற்றம் கிட்டும்.

ராகு பகவான் சஞ்சார பலன்

14.08.2003 வரை ராகு பகவான் உமது ராசிக்கு 10ல் அமர்வு. இதனால் செய்தொழிலில் மிகுந்த அலைக்களிப்புக்கள் இருந்து வரும். சலிப்படையாமல் திட்டமிட்டு பணி புரிதல் நலம்.

15.08.2003 முதல் 14.03.2005 வரை ராகு 9ல் சஞ்சாரம். இதனால் தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. வெளிநாடு செல்ல வாய்ப் புக் கிட்டும். புதிய முதலீடுகள் செய்யும்போது மிகுந்த கவனம் தேவை.

05.03.2005 முதல் 21.09.2006 வரை ராகு பகவான் உமது ராசிக்கு 8ல் அமர்வு. இதனால் குடும்பத்தில் அவ்வப் போது சிறுசிறு வாக்கு வாதம் வர வாய்ப்புள்ளது. சற்று விட்டுக் கொடுத்துப் போனால் பிரச் சினை பெரிதாகாது.

கேது பகவான் சஞ்சார பலன்

14.08.2003 வரை கேது பகவான் உமது ராசிக்கு 4ல் சஞ்சாரம். இதனால் உடல் நலனில் கவனம் தேவை. அதுபோல் தாயாரின் உடல் நலனிலும் கவனம் தேவை. கல்வி பயிலும் மாணவர்கள் படிப்பில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

15.08.2003 முதல் 04.03.2005 வரை கேது பகவான் உமது ராசிக்கு 3ல் சஞ்சாரம். இதனால் ஞானிகள், மகான்களின் நல்லாசிகள் கிட்டும். பிரார்த்தனைகள் பலிதமாகும். இளைய சகோதர வழியில் மனச் சஞ்சலம் உண்டாக இடமுண்டு.

05.03.2005 முதல் 21.09.2006 வரை கேது பகவான் உமது ராசிக்கு 2ல் சஞ்சாரம். இதனால் குடும்பத்தில் தெய்வீக செலவுகள் வர வாய்ப்புள்ளது. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் சமரசப் போக் கில் இருப்பது நலம். புனித ஸ்தல யாத்திரை செல்ல இடமுண்டு.

சனி பகவான் சஞ்சார பலன்

22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிப்பதால் மனைவி பேரில் வீடு, மனை, பூமி வாங்க இடமுண்டு. சகோதர வழியில் புதிய தொழில் தொடங்க இட முண்டு. தோட்டத் தொழில், மருத் துவம் போன்ற வியாபாரம் சிறப் படையும்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் ராகு சாரத்தில் சஞ்சாரம். இதனால் போக்குவரத்து மூலம் அனுகூலம் கிட்டும். மறை முக வருவாய் கிடைக்க இடமுண்டு. வேறு மொழி பேசுவோர் உதவி புரிவர்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் குரு பகவான் சாரத்தில் சஞ்சாரம். இதனால் வாக்கினால் வளமும் நலமும் கூடும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி



கள் நடக்கும். அம்மான் வகையின ரால் அனுகூலம் கிட்டும். உயர் கல்வி பயில சிலர் வெளிநாடு செல்ல நேரும். சிலருக்கு மனைவியின் சேமிப்புக் கைகொடுக்கும்.

சனி பகவான் வக்கிரம்

25.11.2003 முதல் 16.02.2004 மற்றும் 13.11.2004 முதல் 13.03.2005 வரை சனிபகவான் வக்கிரம் ஆக சஞ்சாரம் செய்கிறார். இதனால் கடன் தீரும். கோட் வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிட்டும். மனைவி யின் உடல் நலனில் கவனம் தேவை. தொழில் கூட்டாளிகளிடம் சிறுசிறு மனவேறுபாடுகள் வர வாய்ப்புள்ளது.

நட்சத்திர பலன்

மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு: உமது நட்சத்திர நாயகர் கேது அவர் சனி பகவானுக்கு பகை என்பதால் மருத்துவச் செலவுகள் வரலாம். எனினும் சனி பகவான் 6க்குடை யவர் கெட்டவன் கேட்டிடில் கிட்டி டும் ராஜயோகம் என்னும் விதிப் படி சனி பகவானால் கெடுதிகள் இல்லை.

பூரம் நட்சத்திரத்திற் பிறந்த வர்களுக்கு: உமது நட்சத்திர நாயகன் சுக்கிரன் அவர் சனி பகவானுக்கு நட்புக் கிரகம். எனவே சனி பகவானால் உமக்கு இன்னல் இல்லை. தூர தேசத்திலிருந்து நற் செய்திகள் வரும். தொழில் வழி நலன்கள் கூடும். இளைய சகோதர வழியில் ஏற்றம் கிட்டும்.

உத்தரம் 1ம் பாதத்திற் பிறந்தவர்களுக்கு: உமது நட்சத்திர நாயகன் சூரியன். உமது ராசி நாதனும் அவரே. இதனால் கடன் தொல்லை தராது. அரசு வழி அல்லல்கள் அகலும். மனைவியின் உடல் நலனில் கவனம் தேவை.

தாரா பலன்

மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு: 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பக வான் உமது நட்சத்திரத்திற்கு பிரத் யக்கு தாரையில் சஞ்சாரம். இத னால் எந்தக் காரியத்தில் ஈடுபடு வதானாலும் மிகவும் எச்சரிக்கை யுடன் திட்டமிட்டு செயற்பட நன்று.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் சாதக தாரையில் சஞ்சாரம் செய்வதால் எடுத்த காரியம் யாவினும் வெற்றி மீது வெற்றிவந்து சேரும். இறைய ருளால் இன்னல் அகலும்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனி பகவான் வதை தாரை யில் சஞ்சாரம் செய்கிறார். இதனால் அரசு வழியில் அனுகூலமற்ற போக்கு நிலவும். பணம் கையாளும் பணி யில் இருப்போர் மிகவும் கவன முடன் கையாள்வது நலம்.

பூரம் நட்சத்திரத்தில் பிறந்த வர்களுக்கு: 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் ஷேமத் தாரையில் சஞ்சாரம். இதனால் வீடு, மனை, பூமி, தோட்டம், எஸ்ரேட், வண்டி, வாகனம் என வாங்க இடமுண்டு. நீண்ட கால நோய்கள் விலகும்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் பிரத்யக்கு தாரை யில்சஞ்சாரம் செய்வதால் காரியத் தில் கவனம் தேவை. எதிலும் முன்னரே திட்டமிட நன்று. எச்சரிக்கையுடன் செயற்பட்டால் ஏமாற்றம் தவிர்க்கலாம்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் சாதக தாரை யில் சஞ்சாரம். இதனால், தொட் டது துலங்கும். வெற்றி மீது வெற்றி வந்து சேரும். மனைவியின் சேமிப்பு உதவும். கருத்தொருமித்து காதல் மணம் கைகூடும். வாக்கினால் வளமும், நலமும் கூடும்.

உத்தரம் 1ம் பாதம் பிறந்த வர்களுக்கு: 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் விபத்துத் தாரையில் சஞ்சாரம். இதனால் போக்குவரத்தில் கவனம் தேவை. வெளிநாடு செல்வோர் சரியான வழியில் செல்வது நலம். செல்லுமுன்பு பிரயாண ஆவணங் களை சரிபார்த்துக் கொள்வது நலம்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் கேமத் தாரையில் சஞ்சாரம் இதனால் வாழ்வில் வளமும் நலமும் கூடும்.வீட்டில் விருந்தினர் வருகை அதிகரிக்கும். வீடு வண்டி வாகனம் என வாங்க நேரும்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் பிரத்யக்கு தாரை யில் சஞ்சாரம். இதனால் எந்தக் காரியத்தில் ஈடுபடும் போதும் மிகுந்த கவனத்துடன் திட்டமிட்டு ஈடுபட நன்று. சீட்டு சேமிப்பு போன்றவை களில் கவனமாக இருப்பது நலம்.

பரிகாரம்

உமது ராசிக்கு 11ல் சனி பக வான் சஞ்சாரம். 6,7க்குடைய சனி பகவான் 11ல் இதனால் நன்மை யும் தீமையும் கலந்தே நிகழும். குருபகவான் 12,1,2,3 ஆகிய வீடுக ளிலும் ராகு 10,9,8,7 ஆகிய வீடுக ளிலும், கேது பகவான் 4,3,2,1 ஆகிய வீடுகளிலும் சஞ்சாரம். இதனால் பிரதி சனிக்கிழமை சனிபகவானுக்கு எள்தீபம் ஏற்றவும். ''நீலாஞ்சன ஸமா பாசம் ரவிபுத்ரம் யமாக்ரஜம் சாயா மார்த்தாண்ட சம்பூதம் தம்

ஜோதிட மணி
துரைராஜ்

நமாமி சனைஸ்ச்சரம்" என்ற மந்தி ரத்தை தினசரி 108 முறை ஜெபிக் கவும். பிரதி வியாழன் தட்சணா மூர்த்திக்கு நெய்தீபம் ஏற்றவும். பிரதோச காலத்தில் சிவாலய தரி சனம் செய்க. சங்கட கர சதுர்த் தியில் விநாயகரை வழிபடவும். ''காரிய சித்தி மாலை" பாராயணம் செய்க. (தொடரும்)

மட்டு. நகரப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

மட்டக்களப்பு நகரில் அண்மை யில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து அப்பிரதேசங் களில் கடந்த சில தினங்களாக பாது காப்பு நடவடிக்கைகள் பலப்படுத் தப்பட்டுள்ளன.

இப்பிரதேசங்களில் இராணுவத்தி னரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், இரவு வேளைகளில் வீதிகளில் செல் வோரை படையினரும், பொலிசாரும் இடைமறித்து தீவிர உடல் சோத னைகளுக்கு உட்படுத்துகின்றனர்.

பொலிஸ் மற்றும் இராணுவத்தி னரின் இத்தகைய செயற்பாடுகளி னால் மாலை வேளைகளில் நகரின் பிரதான பகுதிகளில் சன நடமாட் டம் குறைந்து காணப்படுவதுடன், வர்த்தக மற்றும் அரச திணைக் களங்களின் செயற்பாடுகள் நேர காலத்துடன் முடிவடைகின்றன.

இதேவேளை, தமிழீழ விடுத லைப் புலிகளின் புலனாய்வு உறுப் பினர் பூவண்ணனின் கொலையைத் தொடர்ந்து, மட்டக்களப்பு இராணு வக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமது அரசியற் பணிகளை மேற்கொண்டு வந்த விடுதலைப்புலி உறுப்பினர் கள் அனைவரும் கட்டுப்பாடற்ற பகுதிக்கு திருப்பி அழைக்கப்பட் டதும் குறிப்பிடத்தக்கது. (தி)

தரம் 09 மாணவர்களுக்கான

கட்டுரைப் போட்டி

பரிசுகள் ரூபா 750/= 500/= 250/=
மற்றும் சான்றிதழ்களும்

விடயம் : ''தாய் அன்பிற்கு நிகரேது"

சொற்கள்: 175-200 வரை

கட்டுரைகள் 31.05.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி" வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

இணைக்கும் பத்திரம்

கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :----------
பாடசாலை :----------
:----------
கற்கும் தரம் :----------

உறுதிப்படுத்துகிறேன்

ஆசிரியர்

பிரதமர் - ஜனாதிபதி சந்திப்பின் பின்பே அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி ஆராயப்படும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விற்கும் - ஜனாதிபதி சந்திரிகாவிற் கும் இடையே இன்று நடைபெற வுள்ள ''இடைக்கால நிர்வாகசபை'' பற்றிய பேச்சுவார்த்தையினை அடுத்தே தமது அடுத்தகட்ட நடவ டிக்கைகள் பற்றி ஆராயவிருப்பதாக தமிழ் தேசியக் கட்டமைப்பினர் தெரி வித்துள்ளனர்.

இதுபற்றி கூட்டமைப்பினர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதிக் கும் பிரதமருக்கும் இடையில் இன்று நடைபெறும் பேச்சுவார்த்தையில் எட்டப்படும் தீர்மானங்களைப் பொறுத்தே கூட்டமைப்பினர் மீண்டும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந் தித்து சுமுகமான தீர்வொன்றை பெறும வகையில் கலந்துரையாடவுள்ளனர்.

மேலும் எதிர்வரும் ஜூன்மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள நிதிவழங்கும் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பங்கேற்கச் செய்யும் வகையிலான சகல முயற்சி களையும் நாம் மேற்கொண்டு வரு கிறோம்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள் டோக்கியோ மாநாட்டிற்கு செல்லத்தடையாகவுள்ள விடயங் கள் பற்றி அரசுடனும் - விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தி சுமுகமான தீர்வொன் றைப் பெற்றுக்கொள்ளவும் முயற்சி செய்து வருகிறோம் எனத் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை, வடக்கு - கிழக் கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றைப் பெற்றுத்தருமாறு கோரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச வுள்ள பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா இதுற்றி அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் சட்டமா அதிபருடனும் கலந்தாலோ சித்து வருவதாக அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (உ-10)

காணாமற்போனோர் குறித்த விசார ணை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து 1996, 1997 ஆம் ஆண்டுகளில் படையின ரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பான மனித உரி மைகள் ஆணைக்குழுவின் 5ஆம் கட்ட விசாரணைகள் எதிர்வரும் 30ஆம் திகதி முதல் எதிர்வரும் 1ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

31ஆம் திகதி வலிமேற்குப் பிர தேச சபை அலுவலகத்திலும் ஏனைய நாட்களில் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத் திலும் இவ்விசாரணைகள் இடம்பெற வுள்ளன.

(உ-8)

தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் குறித்து செயலகத்தில் விசாரணை

பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் யாழ். வருவர்

(திருநெல்வேலி)

வடக்கு - கிழக்குத் தமிழ் ஊடக வியலாளர்கள் தாக்கப்பட்ட சம்வங் கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவென பாதுகாப்பு அமைச் சகத்தைச் சேர்ந்த இருவர் எதிர்வ ரும் 4ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன யாழ்ப் பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வனுக்கு நேற்று கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு ஊடகவி யலாளர்கள் கூலத்துக்குக் காலம் தாக்கப்படுவதைக் கண்டித்து யாழ்ப் பாண ஊடகவியலாளர் சங்க ஏற்பாட் டில் கடந்த பெப்வரி மாதம் 17ஆம் திகதி யாழ். பஸ் நிலையத்தில் யாழ்ப் பாண ஊடகவியலாளர்கள் வாயைக் கறுப்புத் துணியால் கட்டிப் போராட் டம் ஒன்றினை நடத்தினர். அத்து டன் இது தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறும் கோரிக்கை விடுக்கப் பட்டிருந்தது.

இதன் அடிப்படையிலேயே மேற்படி விசாரணைக்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரையான மூன்று தினங்கள் யாழ். செயலகத்தில் இட மபெறவுள்ள இந்த முதல் கட்ட விசா ரணைக்கு மூவர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இனம் தெரியாதவர்களால் வீடு தாக்கப்பட்டதாகக் கூறப்படும் வாழைச்சேனை ஊடகவியலாளர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி, மானிப்பா யில் பெண் புலிகள் மீது படையினர் தாக்குதல் நடத்திய இடத்திற்கு செய்தி சேகரிக்கச் சென்ற போது தாக்கப் பட்ட ஈழநாடு பத்திரிகைச் செய்தியா ளர் மனோகரராஜா, நெல்லியடியில் பொதுமக்கள்பேரணி மீது பொலிஸார் நடத்திய தாக்குதல் குறித்து செய்தி சேகரித்தவேளை தாக்கப்பட்ட யாழ்ப் பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தமிழ்ச்செல்வன் ஆகி யோரே மேற்படி விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சகத்தை சேர்ந்த ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஒலிவர் பி.வீரசேன, சிரேஸ்ட உதவிச் செயலாளர் இ.இ.சந்திர ஆகியோர் இந்த மூன்று தினங்களும காலை 9.45மணிமுதல் பி.ப 4மணி வரை இந்த விசாரணைகளை நடத்த வுள்ளனர். (உ-43)

மோட்டார் வாகனப் பதிவு திணைக்களம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தின் மோட் டார் வாகனப் பதிவுத் திணைக்கள இடமாற்றத்தால் பொது மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதுவரை காலமும் யாழ். செயலக வளாகத்தில் பிரதான கட்டடத்திற்கு வெளியே அமைக்கப் பட்டிருந்த இத்திணைக்களம் தற்போது பிரதானகட்டடத்தில் இயங்கி வருகின்றது.

இதனால், இத்திணைக் களத்திற்கு வரும் மக்கள் யாழ். செயலக உட்பகுதியிலும், அலுவல கத்திற்குச் செல்வதற்கான மிக ஒடுங் கிய பாதைகளிலும், திணைக்கள வாயிலிலும் குவிந்து நிற்கின்றனர்.

இதன் காரணமாக யாழ். செயலகத்திற்கு வேறு காரணங்க ளுக்காக வரும் மக்கள் அப்பகுதிக ளைக் கடந்து செல்லும் போது பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை, யாழ். செய லகத்திற்கு அலுவலக தேவைகளுக் கென வருவோரை விட மோட்டார் ஊர்தித் திணைக்களத்திற்கு வரு வோரே அதிகமாகக் காணப்படுகின் றமையும் குறிப்பிடத்தக்கது.(உ-4)

அடிப்படை மனித உரிமையை படையினர் மீறியுள்ளனர்

சட்டத்தரணி காண்டீபன் ம.உ.ஆ.கு.இல் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

முகமாலைச் சோதனைச் சாவடி யில் தனது அடிப்படை மனித உரி மையை படையினர் மீறியுள்ளதாக சட்டத்தரணி ந.காண்டீபன் நேற்று மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இம்முறைப்பாட்டைப் பதிவுசெய்த மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர், அடிப்படை மனித உரிமையை மீறும் செயலில் ஈடுபட்டதாக கூறப்படும் முகமாலைச் சோதனைச் சாவடி இராணுவ அதிகாரியை எதிர்வரும் 5ஆம் திகதி மனித உரிமை ஆணைக குழுவின் யாழ். அலுவலகத்திற்கு விசாரணைக்குச் சமுகமளிக்குமாறு அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த மேற்படி சட்டத்தரணி தனது முறைப் பாட்டில்,

கடந்த 23 ஆம் திகதி ஏ-9 பாதையூடாகத் தான் யாழ்ப்பாணம் வந்தபோது, அங்குள்ள இராணுவத் தினர் சோதனையிட முயன்றனர்.

அப்போது நான் சட்டத்தரணிகள் சங்க அடையாள அட்டையைக் காண் பித்து சட்டத்துறையின் விழுமியங் களைப் பேணும் வகையில் என்னை கௌரவமாகப் பயணிக்க அனுமதிக் கும்படி இராணுவத்தினரிடம் கேட்டேன்.

அதற்கு அப்பகுதிக்குப் பொறுப் பான இராணுவ அதிகாரி எனது சட்டத்தரணிகள்சங்க அடையாள அட்டையை வாங்கிப் பார்த்துவிட்டு ''நீ தமிழனா? சிங்களவனா?'' எனக் கேட்டார்.

அதற்கு ''நான் தமிழன்'' எனப் பதிலளித்த சமயம் ''யாராக இருந்தா லும் பயணப் பைகளைச் சோதனையிட வேண்டும்'' எனக்கூறி அங்குநின்ற படையினருக்கு உடனடியாக சோதனை யிடுமாறு உத்தரவிட்டார்.

இதனை அடுத்து நானும் எனது தொழில்த்துறைக் கௌரவத்தைப் பேணும்பொருட்டு சோதனையிட அனு மதித்தேன். எனது பயணப் பையில் இருந்த அனைத்தும் சோதனையிடப் பட்ட பின்னர் என்னைச் செல்ல அனுமதித்தனர்.

இது தொடர்பாக கடந்த 24ம்திகதி இளவாலைப் பொலிஸ் நிலையத் திலும் முறைப்பாடு செய்திருப்ப தாக அவர் தெரிவித்துள்ளார். (உ-43,4)

வேலணை பிரதேச சபை

கேள்வி அறிவித்தல் - 2003

1. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் எமது சபையால் கோரப்படுகின்றது.

இல.	வேலை விபரம்	கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கப்படக்கூடியது)	கேள்விப்பத்திரப் பணம் (மீளளிக்கப்படமாட்டாது)
01	சங்கத்தானை கோயில் வீதி, புங்குடுதீவு.	3, 600/=	360/=
02	குடலைப்பே வீதி, நயினாதீவு.	2, 400/=	240/=
03	வங்களாவடி வீதி, நயினாதீவு.	4, 440/=	445/=
04	மொங்காணைப்புலம் வீதி, திருவள்ளுவர் வீதி, சரவணை மேற்கு.	8, 000/=	800/=
05	முகப்பு வயல் கந்தசாமி வீதி, மண்டைதீவு.	8, 400/=	840/=
06	உதயசூரியன் சனசமூக நிலையத்திருத்தம், மண்டைதீவு.	2, 500/=	250/=
07	பாரதி சனசமூக நிலைய திருத்தம், சரவணை.	2, 700/=	270/=

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்க முடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

01. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்த காரர் பதிவு, தரைப்படுத்தல் திட்டத்தின் கீழ் எம் 09உம் அதற்கு மேற்பட்ட தரம் ஒன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
02. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தில் (இ.தெ.ஒ.ச) உறுப்பினராக அல்லது எமது சபையில் பதிவு செய்யப்பட்டோரும், கிராம அபிவிருத்திச் சங்கம் விவசாய் சம்மேளனம், சமூர்த்தி அமைப்பு கேள்வி கோரலாம்.
03. கடந்த 5 வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களை திருப்தி கரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த 5 வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர் களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதரவளிக் கப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரல் ஒன்றை வழங்குமாறு கேள்வியிடுவோர் வேண்டப்படுகின்றனர்.
04. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு கூறுவிலை ஆற்றலளவைகளை கொண்டிருக்கவேண்டும்.
05. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின்கீழ் விளங்கக்கூடாது.
06. கேள்விப்பத்திர ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

அ) ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விக்காரர் மேலதிகத் தகவல்களை கேள்விப்படிவத்தில் பெறமுடியும் என்பதுடன், கேள்விப் படிவங்களினை 02.06.2003ஆம் திகதி தொடக்கம் 06.06.2003ஆம் திகதி நண்பகல் 12மணிவரை அட்டவணையில் உள்ள தொகையினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ) கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகள் கடித உறையில் இட்டு அரக்கு முத்திரையிட்டு ''செயலாளர், வேலணைப் பிரதேச சபை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 06.06.2003ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்பக்க மூலையில் வேலை விபரத்தினை எழுதுதல் வேண்டும்.

இ) கேள்விகள் 06.06.2003ஆம் திகதி பி.ப. 1.00மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தோர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.

ஈ) கேள்விகளை ஏற்கவே அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.

உ) மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ) கூறுவிலை தயாரிப்புக்கு அல்லது ஆகு செலவுகளுக்கு அல்லது செல்வினங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

செல்லப்பா சண்முகராசா (ஜே.பி),
செயலாளர், வேலணை பிரதேச சபை.

(C/6228)

தாதிகள் பயிற்சிப் பாடசாலை விரிவுரை மண்டபம் கட்டுவதற்கான

கேள்வி கோரல்

யாழ்.போதனா வைத்தியசாலை தாதிகள் பயிற்சிப் பாடசாலை விரிவுரை மண்டபம் கட்டுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது. கேள்விப் பத்திரங்களை யாழ். வைத்தியசாலையில் 31.05.2003 வரை மீளளிக்கப்படாத ரூபா 2000\= கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 07.06.2003 திகதியன்று காலை 10.00 மணியாகும்.

ஏற்கனவே பணம் செலுத்தியவர்கள் அப்பற்றுச் சீட்டைக் காட்டி விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்
வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம்
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C-6229)

சீனச் சுரங்க விபத்தில் 25 பணியாளர்கள் பலி

(பீக்கிங்)

சீனா நிலக்கரிச் சுரங்கமொன்றில இடம்பெற்ற வெடிவிபத்தில் 25 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் ஹெனான் மாகாணத்தில் சட்டவிரோதமாக இயங்கி வந்த நிலக்கரிச் சுரங்கத்திலேயே நேற்று இந்த வெடி அனர்த்தம் நேர்ந்துள்ளது.

வெடி விபத்து நிகழ்ந்த சமயம் இந்தச் சுரங்கத்தில் பணியில் ஈடுபட்டிருந்தவர்களில் 27 பேர் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பியுள்ளனர்.

உயிரிழந்த 25 பேரின் சடலங்களும் மீட்புப் பணியாளர்களினால் மீட்கப்பட்டுள்ளன.

இதேசமயம், சீனாவின் ஷாங்ஷி மாகாணத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கமொன்றில் திடீரென ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 15ற்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர்.

இவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட பணியாளர்கள், காணாமல் போனோர்களை உயிருடன் மீட்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை எனக் கூறியுள்ளனர்.

இதேவேளை, சீனாவில் கடந்த ஒரு மாதத்தில் சுரங்க விபத்துக்களில் மட்டும் 125ற்கும் மேற்பட்ட சுரங்கத் தொழிலாளர்கள் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

இராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் நிறுத்தவேண்டும்

பிரான்ஸ் அமைச்சர் கோரிக்கை

(காஸா)

மத்திய கிழக்கின் சரித்திரத்தில் புதியதோர் அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் டி விலப்பின் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பலஸ்தீன காஸா பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட டொமினிக் அங்கு பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத்தைச் சந்தித்துப் பேசிய பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு அதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் உண்டு எனக் கூறிய டொமினிக்,

இஸ்ரேல் காஸாப் பகுதிக்கான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்றும், பலஸ்தீன மேற்குக் கரைப் பகுதியிலுள்ள இஸ்ரேல் இராணுவத்தினரை வாபஸ் பெற வேண்டும் என்றும் இஸ்ரேலிடம் கோரிக்கையொன்றையும் விடுத்துள்ளார். (உ-2)

தி.மு.க. பிரமுகர் கொலைக்கும் மு. அழகிரிக்கும் தொடர்புண்டு

விசாரணைகள் மூலம் தெரியவருகை

(புதுடில்லி)

தி.மு.க. பிரமுகர் பா.கிஸ்ணனைக் கொலை செய்தவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தக்கொலை தொடர்பாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் அளித்த தகவலின் பேரில் கொலை செய்தவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், இவர்களில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இந்தக் கொலை தொடர்பாக கலைஞர் கருணாநிதியின் மகன் மு.க.அழகிரி உட்பட 30 பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் நிலையில் இந்தக் கொலைக்கும் மு.க.அழகிரிக்கும் நேரடித்தொடர்பு இருப்பது பற்றித் தெரியவந்துள்ளது.

பணத்திற்காக கொலை செய்யும் கும்பலைச் சேர்ந்தவர்களே இக்கொலையைச் செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இந்தக் கொலைக்காக அவர்களிற்கு 10 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டதாகவும் பொலிசாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (உ-9)

நிபந்தனையற்ற பேச்சுக்கு இந்தியா பச்சைக்கொடி

(புதுடில்லி)

பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தைக்கு விதித்துவந்த முன்நிபந்தனையை இந்தியா தளர்த்தியுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்சிங்க,

பாகிஸ்தானுடனான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் எல்லை தாண்டிய பயங்கரவாதம் முற்றிலுமாக நிறுத்தப்படவேண்டும் என இந்தியா இனி நிபந்தனை விதிக்காது எனத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானால் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க முடியாதிருப்பதாகவும் இதற்கு முழு அளவிலான தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்த முடியும் என்றும் அவர் மேலும் பாகிஸ்தானுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, இந்தியா முன்வைத்த நிபந்தனையை தற்போது தளர்த்தியிருப்பது, இந்தியாவின் நிலைப்பாட்டில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதை வெளிப்படுத்துவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-2)

நட்புறவை வலுப்படுத்தும் வகையில் சீன-ரஷ்யத் தலைவர்கள் சந்திப்பு

(மொஸ்கோ)

சீன ஜனாதிபதி ஹுஜிம்டாவோ முதற்தடவையாக வெளிநாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

11 நாட்கள் மேற்கொள்ளவிருக்கும் இந்த விஜயத்தின் முதற்கட்டமாக ரஷ்ய தலைநகர் மொஸ்கோவிற்கு நேற்று முன்தினம் சென்றடைந்த ஹுஜிம்டாவோ ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் உட்பட அரச உயர் அதிகாரிகளை சந்தித்துள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்கு மிடையிலான பொருளாதார நெருக்கடிகள் குறித்து விசேடமாக பேசப்பட்டதாக ரஷ்யத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இரு நாடுகளுக்குமிடையே நட்புறவை வலுப்படுத்தும் சிறந்த அடித்தளமாக இச்சந்திப்பு அமைந்துள்ளதென இரு நாட்டுத் தலைவர்களும் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, ரஷ்ய விஜயத்தை முடித்துக் கொண்டு பிரான்ஸ், கஸகஸ்தான், மொங்கோலியா ஆகிய நாடுகளிற்கு ஹுஜிம்டாவோ செல்லவுள்ளார். (உ-2)

இந்தியப் படைகளை ஈராக் அனுப்புவது குறித்து ஆலோசனை

(புதுடில்லி)

ஈராக்கில் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடுவதற்கு இந்திய இராணுவத்தினரை அங்கு அனுப்புவது தொடர்பாக இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையில் பாதுகாப்பு அமைச் சரவைக் குழு வொன்று புதுடில்லியில் கூடி ஆராய்ந்து வருகின்றது.

ஈராக் மீதான அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையின் போர் முடிவடைந்ததையடுத்து அங்கு பாதுகாப்புப் பணிகளில் இராணுவத் தினரை ஈடுபடுத்தும் நோக்கில் அமெரிக்கா இந்தியாவிடம் இராணுவ உதவியைக் கோரியிருந்தது.

இதனையடுத்தே இந்தியப் பிரதமர் பாதுகாப்பு அமைச்சரவைக் குழுவொன்றைக் கூட்டி இது தொடர்பாக ஆலோசித்து வருகின்றார்.

எனினும், இந்திய இராணுவத் தினரை அமைதி காக்கும் பணிகளுக்கு ஈராக்கிற்கு அனுப்பினால் அது அமெரிக்காவின் ஏகாதிபத்தியக் கொள்கைகளுக்கு துணை போவதை ஒத்தது என்று இந்திய மாக்ஸ் கம்யூனிஸ்ற் உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள் சாடியுள்ளன.(உ-2)



நீண்ட கால தாமதத்தின் பின் ஐரோப்பிய அரசுகளால் அங்கீகரிக்கப்பட்டு ஏவப்பட இருக்கும் அமெரிக்க இராணுவத்தின் ஜி.பி.எஸ். ரக செய்மதியின் தோற்றம்

மத்திய கிழக்கு சமாதானத் திட்டம்

இஸ்ரேல் அங்கீகாரம் அமெரிக்கா வரவேற்பு

(ரெல்அவிவ்)

மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்திற்கு இஸ்ரேலிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

எனினும், இத்திட்டத்தை நிபந்தனையுடன் இஸ்ரேல் அங்கீகரித்துள்ளமை பலஸ்தீனத் தலைவர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க அனுசரணையுடன் மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தில் பலஸ்தீனத்திற்கு தனி இராட்சியம் வழங்கப்படும் யோசனைக்கு இஸ்ரேல் அமைச்சரவை உடனடி அங்கீகாரம் வழங்கியுள்ள போதிலும் பலஸ்தீன அகதிகள் இஸ்ரேலியப் பகுதிகளுக்கு திரும்பி வருவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனையுடனேயே இஸ்ரேல் இத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை, இஸ்ரேல்-பலஸ்தீன பிரதமர்களுடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் அடுத்த வாரம் உச்சி மாநாடொன்றை நடத்தவுள்ளார்.

மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக இந்த உச்சி மாநாட்டில் கலந்துரையாடப்படும் என இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் சில்வா ஷெலோன் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி புஷ், இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன மற்றும் பலஸ்தீனப் பிரதமர் முகமட் அப்பாஸ் ஆகியோர் அடுத்த வாரம் ஜோர்டானில் சந்திப்பதற்கான அதிக சந்தர்ப்பம் தோன்றியுள்ளதையடுத்தே இந்த உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

சில சந்தர்ப்பத்தில் ஏனைய பிரமுகர்களும் இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் சில்வா ஷெலோன் கூறியுள்ளார்.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தமது பிராந்தியத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி விஜயம் செய்யவிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்கா ஆதரவுடன் சர்வதேச சமூகத்தினால் முன்வைக்கப்பட்ட மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் இஸ்ரேலிய அமைச்சரவையில் மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-2)

இடிபாடுகளுள் சிக்கிய சிறுமி நான்கு நாட்களின் பின் உயிருடன் மீட்பு

(அல்ஜியர்ஸ்)

அல்ஜீரியாவில் ஏற்பட்ட பூகம்பத்தினால் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 13 வயதுச் சிறுமி, 4 நாட்களின் பின்னர் நேற்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் வடக்கு அல்ஜீரியாவில் பாரிய பூகம்பம் ஏற்பட்டிருந்த சமயம் அந்தப் பகுதியில் கேக்குகள் விற்றுக்கொண்டிருந்த இந்தச் சிறுமி கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்தாள்.

தனது கைகளில் வைத்திருந்த கேக்குகளை சாப்பிட்டு 4 நாட்களாக உயிரைத் தக்கவைத்துள்ள சிறுமி இடையிடையே உரத்துக் குரல் கொடுத்ததை அடுத்தே அப்பகுதிக்கு சென்ற மீட்புப் படையினர் அந்தச் சிறுமியை உயிருடன் மீட்டுள்ளனர். (உ-2)

தரம்-5 புலமைப்பரிசில்

பயிற்சி வினாத்தாள்

வினாத்தாள் இல : 18 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

+ இல. 844, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் சுந்தர் வெளியீடு நிறுவனம் மாணவர்கள் பற்றிய விபரத்தினை ஆய்வு ஒன்றின் பொருட்டு பெற்றுக் கொள்ள விரும்பியது. அதன் பொருட்டு மாணவர் சுய விபரப் படிவம் ஒன்றை அது அடித்து விநியோகித்துள்ளது. அதன் ஒரு பிரதி ஆனது கீழே தரப்பட்டுள்ளது. அதனை மிகக் கவனமாக வாசித்து நிரப்புக.

மாணவர் சுய விபரப் படிவம்

01. மாணவரது முழுப்பெயர் : .....
02. முதலெழுத்துக்களுடன் பெயர் : .....
03. பால் : .....
04. சமயம் : .....
05. பிறந்த திகதி : .....
06. பிறந்த இடம் : .....
07. சொந்த முகவரி : .....
08. தொலைபேசி இலக்கம் : .....
09. கல்விகற்கும் தரம் : ..... பிரிவு .....
10. கல்விகற்கும் பாடசாலை : .....
11. தந்தையார் பெயர் : .....
12. தாயார் பெயர் : .....
13. சகோதர சகோதரிகளின் விபரம் : .....

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையாவை எனத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

14. மாணவரது கையொப்பம்
.....

+ உமது சுயவிபரத்தை அனுப்புவதன் பொருட்டு உமது முகவரி, நிறுவனத்தின் முகவரி என்பனவற்றை தபால் உறையில் எழுதுக.

15. .....
.....
.....

16. .....
.....
.....

17. இதனை ஒரு சாதாரண தபாலில் அனுப்பி வைப்பின் நீர் ஒட்டவேண்டிய முத்திரையின் பெறுமதி யாது? .....
18. இதனை ஒரு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டுமாயின் நீர் ஒட்டவேண்டிய முத்திரையின் பெறுமதி யாது? .....
19. முத்திரை விநியோகத்துடன் தொடர்புடைய திணைக்களம் எது? .....

+ கீழ்வரும் பந்தியை மிகவும் கவனமாக வாசிக்க.

அந்த அழகிய கிராமத்தின் மத்தியில் ஆறு சலசலவெனப் பாய்ந்துகொண்டிருந்தது. அந்த ஆற்றங்கரையில் பென்னம்பெரிய மரம் ஒன்று நின்றது. அந்த மரத்தில் வாழ்ந்த கன்னங்கரிய சின்னஞ்சிறிய காகக் குஞ்சு ஒன்று கா கா எனக் கரைந்தவாறு மெல்ல எட்டிப் பார்த்தது.

+ பந்தியின் பிரகாரம் தரப்பட்ட சொற்கள் எந்தவகையுள் அமையுமோ அதன கீழே புள்ளடி இடுக. (உதாரணம் ஒன்று செய்து காட்டப்பட்டுள்ளது)

	சொல்	பெயர்ச்சொல்	வினைச்சொல்	பெயரெச்சம்	வினையெச்சம்	இணைமொழி
	பார்த்தது		X			
20	ஆறு					
21	பாய்ந்தது					
22	பெரிய					
23	கன்னங்கரிய					
24	நின்றது					

+ கீழ்வரும் சந்தர்ப்பங்களில் தரப்பட்ட தரவுகளுக்கமைய பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

25. 10கிலோ இரும்புப் பொதியுடன் அப்புகாமியும், 10கிலோ பஞ்சுப் பொதியுடன் புஞ்சி பண்டாவும் செல்கின்றனர். இருவரும் சமதூரம் நடந்த பின் இளைப்பாறினார்கள். இவர்களில் அதிகளவு பாரத்தைச் சுமந்தவர்

1. புஞ்சிபண்டா - இவர் மிகவும் களைத்திருப்பார்.
2. அப்புகாமி - இவர் மிகவும் களைத்திருப்பார்.
3. இருவரும் தூக்கிய பாரங்கள் சமன் அதனால் இருவரும் களைத்திருக்கலாம்.

+ நாடக விழா ஒன்றில் 2 ஆண்களுக்கும் 1 பெண்ணுக்குமான அனு மதிச் சீட்டுப் பணம் ரூபா 8.00 உம், ஒரு ஆணுக்கும் 2 பெண்களுக்கு மான அனுமதிச் சீட்டுப் பணம் ரூபா 7.00 உம் என அறவிடப்பட்டது.

26. இதன் பிரகாரம் 1 ஆணிற்கும் 1 பெண்ணிற்குமான அனுமதிச் சீட்டுப் பணம் எவ்வளவு?
1. ரூபா 2.00 2. ரூபா 5.00 3. ரூபா 6.00
27. 1 ஆணுக்குரிய அனுமதிச் சீட்டின் பெறுமதி என்ன?
1. ரூபா 3.00 2. ரூபா 4.00 3. ரூபா 2.00
28. பெண்களுக்குரிய அனுமதிச் சீட்டின் பெறுமதி என்ன?
1. ரூபா 2.00 2. ரூபா 4.00 3. ரூபா 3.00
29. 6 ஆண்களும் 3 பெண்களும் நாடக விழாவிற்குச் சென்றால் செலுத்தவேண்டிய கட்டணம்?
1. ரூபா 8.00 2. ரூபா 24.00 3. ரூபா 72.00

+ கந்தசாமி ஒரு மரக்கறி வியாபாரி ஆவார். அவர் ஒரு நாள் சந்தையில் வாங்கிய மரக்கறி பற்றிய விபரம் வருமாறு:

பொருள்	அளவு	பெறுமதி
மிளகாய்	10 kg	280.00
வெங்காயம்	5 kg	80.00
உருளைக்கிழங்கு	8 kg	240.00
கோவா	3 kg	135.00

30. அன்றைய தினம் மரக்கறி கொள்வனவுக்காக அவர் முழுமையாக வழங்கிய பணம் எத்தனை ரூபா? .....ரூபா.....சதம்
31. 1 kg மிளகாயில் ரூபா 7.00 இனை இலாபமாகப் பெறுவதற்கு மிளகாயை என்ன விலைக்கு விற்கவேண்டும்? .....ரூபா.....சதம்
32. 500 கிராம் உருளைக்கிழங்கை ரூபாய் 20.00 ஆக விற்பனை செய்தால் 1 கிலோகிராம் உருளைக்கிழங்கிற்கு எவ்வளவு ரூபா இலாபம் கிடைக்கும்?.....ரூபா.....சதம்
33. 3 kg கோவாவையும் விற்பனை செய்ததனால் அவர் பெற்ற லாபம் ரூபா 45.00 எனின் 1 கிலோ கிராம் கோவாவை என்ன விலைக்கு விற்பனை செய்தார்?.....ரூபா.....சதம்
34. அவர் அன்று வாங்கிய வெங்காயத்தில் 3 kg 420g இனை விற்பனை செய்தார். தற் போது அவரிடம் எஞ்சியுள்ள வெங்காயத்தின் நிறையை எழுதுக.....kg.....g

+ சரியான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

35. வரன் ரூபா 60,000 பெறுமதியான கணனி ஒன்றை முதலில் ரூபா 30,000 இனைச் செலுத்தி வாங்கினார். எஞ்சிய தொகையை ரூபா 1000 வீதம் மாதா மாதம் செலுத்துவதாக ஒப்புக்கொண்டார். எஞ்சிய பணம் முழுவதையும் ரூபா 1000 வீதம் எத்தனை மாதங்களில் செலுத்த வேண்டும்?
.....
36. அவர் பணம் செலுத்தும் காலப்பகுதியை வருடம் மாதத்தில் தருக.
வருடம் ..... மாதம் .....
37. வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையே அமைந்த திசைக்கு எதிரான திசை யாது?
.....
38. A+A=10, BXB=9, A+B+C=15 எனின், C யின் பெறுமானம் யாது?
.....
39. அருகேயுள்ள உருவிற்கு தட்டையான முகங்கள் எத்தனை உண்டு?...

+ கீழே தரப்பட்டுள்ள புலன் உணர்வுகளை அறிந்துகொள்ள உதவும் சரியான உறுப்பின் பெயரை கூட்டுக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

காது, மூக்கு, நாக்கு, கண், தோல்

40. மிகவும் அழகான ஓவியம் .....
41. அன்னாசிப் பழம் ஒன்றின் சுவை .....
42. மென்மையான இசையுடன் கூடிய பாடல் .....
43. நுளம்பு கடிக்கும்போது ஏற்படும் வலி .....
44. பொதிசெய்யப்பட்டுள்ள பூச்சி உருண்டை .....

+ நிரல் 1~ல் சில தரவுகளும் நிரல் 2~ல் அத்தரவுகளுடன் தொடர்புடைய சில தகவல்களும் உண்டு. அத்தரவுடன் சரியாகத் தொடர்புபடும் தகவலை குறிக்கும் இலக்கத்தை நிரல் 2~ல் இருந்து தெரிவுசெய்து நடுவே உள்ள கூட்டினுள் எழுதுக.

நிரல் 1	விடை	நிரல் 2
45. வளர்ச்சிக்கு அவசியமான உணவுக் கூறு		1. நுகரி
46. உற்பத்தியாளர்		2. ஒட்சிசன்
47. வித்து முளைப்பதற்கு அவசியமானது		3. பசசைத தாவரங்கள
48. சுவாசத்திற்கு தேவையான வாயு		4. நீர், ஒட்சிசன், வெப்பநிலை
49. உணவுக்கு வேறு அங்கிகளில் தங்கியிருப்பவை		5. பால், முட்டை

+ அருகே தரப்பட்டுள்ள பிராணிகளை நன்கு அவதானித்து விடை எழுதுக.

50. தாவர உணவை மட்டும் உண்பது எது?
51. வேட்டையாடும் உயிரி எது?
52. அனைத்துமுண்ணிப் பறவை எது?
53. இரை மீட்கும் அங்கி எது?
54. உணவை முழுமையாக விழுங்கும் அங்கி எது?

+ உமது சூழலில் நீர் அவதானித்த சில உயிரங்கிகளின் அலகுகள் தரப்பட்டுள்ளன. அவ் உயிர் அங்கிகளின் பெயர்களை எழுதுக.

55. ..... 56. ..... 57. ..... 58. ..... 59. .....

+ கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் A எனவும் பிழையாயின் B எனவும் கூட்டுக்குள் எழுதுக.

60. வயலின் ஒரு நரம்பு வாத்தியக் கருவி ஆகும். [ ]
61. கைக்கு சொரசொரப்பானதும் கடற்கரையில் காணப்படுவதுமான மண்வகைகளிமண்ஆகும். [ ]
62. உயிருள்ளவை யாவும் வளர்ச்சி அடையும், சுவாசிக்கும் [ ]
63. பாடசாலை நிர்வாகம் ஒன்றுக்கு அதிபர் பொறுப்பாக இருப்பார். [ ]
64. புலமைப்பரிசில் பரீட்சை தரம் 5ல் ஒரே ஒரு தடவை மட்டுமே நடைபெறும். [ ]

+ கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களை கூடுகளுக்குள் தரப்பட்டுள்ள தலைப்புகளுக்கேற்ப ஒழுங்குபடுத்துக.

Elephant, Eight, Pineapple, Sunflower, Brown, Violet, Ten, Lemon, Rose, Cow

65. Fruits	66. Flowers	67. Colours	68. Numbers	69. Animals

+ நடைபெற்றுக் கொண்டிருக்கும் சில செயற்பாடுகள் தரப்பட்டுள்ளன. அவற்றை குறிக்கும ஆங்கிலப் பதங்கள் கூட்டுக்குள் உண்டு. பொருத்தமான ஆங்கிலச் சொல்லை உருவின் கீழ் எழுதுக.

70. ..... 71. ..... 72. ..... 73. ..... 74. .....

Playing, Running, Laughing, Reading, Writing

+ எனக்கு விருப்பமான உணவு என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலையுடன் கூடிய ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.

75. .....
.....
76. .....
.....
77. .....
.....
78. .....
.....
79. .....
.....
80. .....
.....

தரம்-5 புலமைப்பரிசில்

பயிற்சி வினாத்தாள்

வினா இல : 16

கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:

01. கி. தேனுகா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி
02. த. அருந்துஷா- கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி
03. இ. சுபாஷன்- நீர்வேலி சி.சி.த.க பாடசாலை
04. ஸ்ரீ. கஸ்தூரி- அச்சுவேலி மத்திய கல்லூரி
05. பா. துஷந்தி- யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்
06. ச. லசிகலா- யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்
07. ப. குகதர்சினி- அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
08. வ. சுஜீவன்- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
09. இ. இராசப்பிரவிந்தன்- மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை
10. து. வைஷணவி- ஆனைக்கோட்டை அ.மி.த.க். பாடசாலை
11. த. நிருசா- வல்வை றோ.க.த.க. பாடசாலை
12. பா. சர்மிளா- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
13. ந. கஜவேல்- கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம்
14. ம. சிவறோஜன்- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
15. சி. தேவகி- துன்னாலை மே.மெ.மி.த.க. பாடசாலை
16. கே.சோபனா- யா/ அருணோதய கல்லூரி
17. ந. பவிதா- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
18. ம. உஷாந்தி- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
19. ம. இந்துயா மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
20. ம. நிஷாந்தி கரந்தன் இராமப்பிள்ளை வித்தியாலயம்
21. பா. ஜீவிகா மட்டுவில் அ.மி.த.க. பாடசாலை
22 த. கபிலன் யா/ பரியோவான் கல்லூரி
23. ப. அகீர்த்தனா தேவரையாளி இந்துக்கல்லூரி
24. வி. துஷயந்தன் நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம்
25. பு. பபிகரன் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
26. இ. வினுஷா மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
27. சி. மனோஜிதன் கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை
28. உ.கோபிகா கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
29. க. தனுசீலன் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
30. சீ. சுஜிபனா அச்சுவேலி மத்திய கல்லூரி
31. ச. சோபிதா துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
32. ந. சஞ்சீவன் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை
33. த. விஜிதன் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
34. வி. தனுசியா கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
35. வை.சிந்துஜா ஆவரங்கால் நடராச இராமலிங்கம் வித்தியாலயம்
36. பி. தமயந்தி சாவகச்சேரி இந்து மகளிர்கல்லூரி
37. பா. சங்கீதா அத்தியார் இந்துக்கல்லூரி
38. பூ. பானுசுதன் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
39. ந. நிவாசன் யா/ இந்து ஆரம்பப்பாடசாலை
40. த. துவாரகா கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
41. சி. கோவர்த்தன் கம்பர்மலை அ.த.க. பாடசாலை
42. ஈ. கோபிதன் கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
43. த. சாளினி வல்வெட்டி இ.த.க. பாடசாலை
44. இ. மதனிகா வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
45. ஐ. சயோராஜ் யாழ். மத்திய கல்லூரி
46. பா. டினேஸ் துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
47. ம. வித்தியா வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
48. க. சிந்துஜன் துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
49. வ. தேனுகா வல்வை சிவகுரு வித்தியாசாலை
50. ம. சரண்யன் ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்
51. ந. சரண்யா மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
52. செ.சங்கீதா வல்வெட்டி இ.த.க. பாடசாலை
53. ச. ஷண்மதுரன் சுழிபுரம் ஐக்கியசங்க சைவவித்தியாசாலை
54. த. தனுசியா வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
55. ச. ஜெயபாரதி வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
56. ஆ. அமல்ராஜ் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
57. பி. ஜோபிதா வல்வை சிவகுரு வித்தியாசாலை
58. ச. அருண் இணுவில் மத்திய கல்லூரி
59. ச. சஜிதீப் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
60. பே.யதீஸ்கரன் மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்
61. தி. கௌரி திருநெல்வேலி றோ.க.த. பாடசாலை
62. ஸ்ரீ. நீரஜா வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
63. இ. கோபிகிருஸ்ணன் வட்டு யாழ்ப்பாண கல்லூரி
64. பி. நந்தினி வல்லை மகளிர் மகாவித்தியாலயம்
65. பா. சந்திரா வல்லை மகளிர் மகாவித்தியாலயம்
66. சி. மதுசன் வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
67. ரா. துர்க்கா கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
68. ம. மதரூபன் நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்
69. ந. பரந்தாமன் வல்லை சிவகுரு வித்தியாலயம்
70. அ. பிரசாந்தன் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் த.க. பாடசாலை
71. சோ.தனஞ்சயன் தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை
72. கி. லக்சனா கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
73. ம. துவாரகன் உடுவில் மகளிர் கல்லூரி
74. செ.திலக்ஷன் மீசாலை வீரசிங்க மகாவித்தியாலயம்
75. க. கார்த்திகா கரவெட்டி அரசினர் த.க. பாடசாலை
76. ஸ்ரீ. சரத்பவன் ஞானாசாரியார் கல்லூரி
77. மே.நீதினி யா/ இந்துமகளிர் ஆரம்பப்பாடசாலை
78. வே.சரண்யா யா/ சுண்டுக்குளி மகளிர்கல்லூரி
79. இ. சரண்யா நவாலி மகாவித்தியாலயம்
80. த. சுகன்யா நவாலி சென் பீற்றஸ் றோ.க.த.க. பாடசாலை
81. சி. துளசிகா சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
82. எஸ்.இராசசேகரம் ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்
83. சி.கஜாளினி சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
84. சி. ஜோதிகா சுண்டிக்குளி மகளிர்கல்லூரி
85. சி. சசாதிகா சுண்டிக்குளி மகளிர்கல்லூரி
86. சு. கிருஷாந் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
87. க. கணபாலன் யா/ இந்து ஆரம்பப்பாடசாலை
88. பெ.நிருஷன் வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
89. வீ. அமலா காசிப்பிள்ளை வித்தியாலயம்
90. பி. ஜோதிகா வல்லை சிவகுரு வித்தியாசாலை
91. ச. இதயச்சந்திரன் வட்டு கார்த்திகேய வித்தியாலயம்
92. செ.பிரியங்கா யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்
93. கு. விஜிதா வல்லை றோ.க.த. பாடசாலை
94. ப. லேகா வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
95. சி. சிவானி சுழிபுரம் ஐக்கியசங்க சைவவித்தியாசாலை
96. ச. அபிநயா சுண்டுக்குளி மகளிர்கல்லூரி
97. இ. அகிலா வதிரி திருஇருதய கல்லூரி
98. ஜெ.டோசன் கல்வியங்காடு இ.த.க. பாடசாலை
99. க. பிரசாயினி கோண்டாவில் சீ.சீ.த.க.பாடசாலை
100. செ.விதுர்ஷன் நவாலி மகாவித்தியாலயம்
101. கி. யாழினி நவாலி மகாவித்தியாலயம்
102. ச. மேனுஷா ஆரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்
103. சி.கோகுலகீர்த்தன் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
104. தி. கஜீவன் யா/ சுப்பிரமணிய வித்தியாசாலை
105. ந. கனிசா கோண்டாவில் சீ.சீ.த.க. பாடசாலை
106. ம. அனுசன் ஆவரங்கால் மெ.மி.த.க. வித்தியாலயம்
107. ச. கயனி கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
108. சி. சிவதர்ஷன் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
109. க. ஜரூசனா தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி
110. ச. நந்துஷா யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்
111. தி. ஜெனக்குமரன் கோப்பாய் றோ.க.த.க. பாடசாலை
112. வீ. நிதூஷன் யாழ். மத்திய கல்லூரி
113. யோ.லவீஜெனா அச்சுவேலி மத்தியகல்லூரி
114. க. விஸ்னுவர்த்தன் யா/ பரியோவான்கல்லூரி
115. ஆ.நிரோஜினி நவாலி சென் பீற்றஸ் றோ.க.த.க. பாடசாலை
116. த. யதுர்ஷன் யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்
117. ச. சுவஸ்திகா இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை
118. தி. வாகீசன் யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்
119. க. லக்ஸ்சனா கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
120. வி. மேனஜா நவாலி மகாவித்தியாலயம்
121. த. தமிழினி நவாலி மகாவித்தியாலயம்
122. சி. கிசோகன் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி
123. ந. சிந்துஜா உடுவில் மகளிர் கல்லூரி
124. வி. கஸ்தூரி வல்வை றோ.க.த.க. பாடசாலை
125. ம. கல்பனா நெல்லியடி மெதடிஸ்த மிஷன் த.க. பாடசாலை
126. மு. கீதாஜினி புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம்
127. ச. கயனி கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
128. யோ.வசந்தா நவாலி மகாவித்தியால்யம்
129. ப. லக்சியா துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
130. வி. கருசன் இணுவில் மத்திய கல்லூரி
131. ம. சரண்யா சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை
132. செ.சஜேந்திரன் யா/ புனித பத்திரிசியார் கல்லூரி
133. க. கரிசினி ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்
134. சி. திலக்ஷன் மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
135. சி. சிவராம் காசிநாதர் வித்தியாலயம்
136. பே.மகிழ்ரதி கோப்பாய் சரவணபவானந்தன் வித்தியாலயம்
137. இ. கிருஷாந் யாழ். மத்திய கல்லூரி
138. ம. அபிவர்சனி சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்
139. ச. பங்கஷன் ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை
140. ர. மயூரி மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
141. பு. கபிலா யா/ ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம்
142. பா. சியாமளா நவாலி மகாவித்தியாலயம்
143. சி. பிருந்தினி கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
144. ச. அனுஷா சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்
145. வ. சங்கீதா வதிரி திருஇருதய கல்லூரி
146. சி. கௌதமி சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
147. நா. கார்த்திகா மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
148. க. பாலசேனானி சுன்னாகம திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
149. எஸ்.சகாதேவன் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
150. ஜெ.கீர்த்தனா சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
151. ஆ.சேந்தன் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
152. பா. லக்சலா நவாலி மகாவித்தியாலயம்
153. சி. வாதுஷா சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்
154. க. நிரோஜன் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்
155. சி. வர்ணன் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்
156. ர. ராஜ்மோகன் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்
157. யோ.சிந்துஜா சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்

தென்னிலங்கையர்க்கு உதவுமாறு வன்னி மக்களிடம் கோரிக்கை

(வவுனியா)

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தென் இலங்கைச் சகோதரர்களுக்கு உதவிக்கரம் நீட்டுமாறு வன்னி வாழ் இளைஞர்களுக்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அடைக்கலநாதன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் இளைஞர்கழக சம்மேளனங்களுக்கு அடைக்கலநாதன் எம்.பி. கடிதங்களையும் அனுப்பி வைத்துள்ளார்.

பொருட்களை வசதியான இடங்களில் சேகரித்த பிற்பாடு, தனக்கு தெரியப்படுத்தினால் அவற்றை தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும் என்று அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

வினாத்தாள் 16-ன் விடைகள்

01. இளந்துளிர் மலர் வெளியீடு
02. இளந்துளிர்
03. நூல், புத்தகம்
04. 24.04.2003
05. 13.00மணித்தியாலங்கள்
06. ஸ்ரீவரன்
07. கலாநிதி பொன் சக்திவேல் தம்பதிகள்
08. திரு. சி. விஜயரத்தினம்
09. வடபிராந்திய போக்குவரத்துச் சபை
10. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்
11. செருப்பு
12. வாத்து
13. மழை
14. பட்டம்
15. சிலந்தி
16. நிலம்
17. மொழி
18. மலர
19. ஏரியா
20. காய்ச்சல்
21. 1974-09-23
22. பி.ப. 2.05மணிக்கு
23. 34m, 30Cm
24. 1/12, 1/8, 1/6, 1/3
25. 250.1
26. 1/10
27. **February, January, March, May, July, August, October, December**
28. 12, 56
29. ரூபா 3500
30. 80பேர்

31 தொடக்கம் 35 வரையிலான வினாக்களுக்குரிய அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

தினம்		மொத்தம்
திங்கள்		120
செவ்வாய்	卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌	
புதன்	卌 卌	110
வியாழன்		95
வெள்ளி	卌 卌	

31. 85,105
32. திங்கள் 卌 卌 卌 卌 卌 卌
卌 卌 卌 卌 卌 卌
卌 卌 卌 卌 卌 卌
卌 卌 卌 卌 卌 卌

வியாழன் 卌 卌 卌 卌 卌 卌
卌 卌 卌 卌 卌 卌
卌 卌 卌 卌 卌 卌
卌

33. திங்கள்
34. செவ்வாய்
35. சனி, ஞாயிறு
36. 25-55
37. 3 வயது
38. 55 வயது
39. S
40. R
41. R
42. R
43. மீற்றர் கோல்
44. தராசு
45. கடிகாரம்
46. வெப்பமானி
47. உடல் வெப்பமானி
48. மழைமானி
49. காற்று திசைகாட்டி
50. காற்று வேகமானி
51. பனிக்கட்டி மிதக்கல்
52. ஊதாநிற கரைசல்
53. மஞ்சல்நிற கரைசல்
54. சரி
55. சரி
56. பிழை
57. பிழை
58. சரி
59. பிழை
60. சரி
61. ✓
62. ✓
63. x
64. ✓
65. ✓
66. D
67. E
68. C
69. B
70. A
71. E
72. D
73. F
74. C
75. A

76 - 81 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான எழுவாய், பயனிலை உடன் அமைந்த ஆறுவாக்கியங்கள் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஆகக் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

கொடியேற்றம்

(சுதுமலை)

யாழ். சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது. (உ-252)

விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பிளவத்த அ.மி.த.க பாடசாலையும் யாழ். திருநாவுக்கரசு வித்தியாலயமும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி, இன்று புதன்கிழமை பி.ப. 2மணிக்கு வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் ஆலய வீதியில் பிளவத்த அ.மி.த.க பாடசாலை அதிபர் க. நடராசா திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் அ. அருணகிரிநாதர் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு சங்கானை கல்விக்கோட்ட அதிகாரி சி. செல்லையா பிரதம விருந்தினராகவும் வலிகாமம் கல்வி வலய ஆரம்ப கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எஸ்.பி. புவனேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-5)

அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கம் நடாத்தும். வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட 15 வயதிற்கு கீழ்பட்ட மாணவர்களுக்கான ''சங்ஸ்தா'' கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கான அறிவுறுத்தல் கூட்டமும் குழு ஒழுங்குத் தெரிவும் இன்று மு.ப. 10மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் போட்டிக்கு விண்ணப்பித்த பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறும் வரும்போது விளையாட்டு வீரர்களின் கலர் புகைப்படம், பிறப்புச் சான்றிதழின் போட்டோப் பிரதி மற்றும் ஏனைய ஆவணங்களை எடுத்து வருமாறு சங்கத் தலைவர் சு. புண்ணியசீலன் கேட்டுள்ளார். (உ-5)

இருவேறு விபத்துக்களில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் படுகாயமடைந்த இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழைப் பகுதியில் இடம்பெற்ற சைக்கிள்-இராணுவ வாகன விபத்தில் படுகாயமடைந்த கோண்டாவில் தெற்கைச் சேர்ந்தவரான க.வைரமுத்து (வயது 69) என்பவரும்,

சைக்கிள்- மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த புத்தூர் மேற்கைச் சேர்ந்த மு.மாணிக்கம் (வயது 45) என்பவருமே யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ-3,7)

தென்னிலங்கை வாழ் மக்கள்

இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர்

நோர்வேயில் இருந்து ஹக்கீம் பேட்டி

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் என்ற வார்த்தைப் பிரயோகம் காரணமாக தென்னிலங்கை மக்கள் தேவை

யில்லாமல் உணர்ச்சி வசப்படுகின்றார்கள். அவர்களிடையே இவ்விடயம் தவறாகவே புரிந்து கொள்ளப்படுகிறது என கப்பல்துறை மற்றும் முஸ்லிம்விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்களில் இருந்து விலகியுள்ள விடுதலைப்புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ள மறுப்புத் தெரிவித்துள்ளதுடன், இடைக்கால நிர்வாக சபையினை வழங்குமாறு அரசிடம் கோரியுள்ளமை பற்றி நோர்வே வெளிவிவகார அமைச்சர் உப்படஉயர் அதிகாரிகளுடன் ஆராய்வதன் பொருட்டும் கப்பல்துறை சம்பந்தமான உத்தியோக பூர்வ பேச்சுவார்த்தையை நடத்தவும் கடந்த 25ஆம் திகதி நோர்வேக்கு விஜயம் ஒன்றை அமைச்சர் ஹக்கீம் மேற்கொண்டுள்ளார்.

தமது மேற்படி விஜயத்தின் போது ஆராயப்பட்ட விடயங்கள் பற்றி வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு கருத்துக்கூறுகையிலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு-கிழக்குப்பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளின் போது நிதி விவகாரங்களை கையாளக்கூடிய இடைக்கால நிர்வாக அமைப்பினையே கோருகின்றனர்.

இந்நிலைப்பாட்டை பெரும்பான்மையினராகிய சிங்கள மக்கள் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள்.

இதேசமயம், அரசு -விடுதலைப் புலிகள் இடையே மேற்கொள்ளப்பட்டுவரும் கடிதப்பரிமாற்றங்களின் பின்னர் இடைக்கால நிர்வாகத்திற்குப் பதிலாக மாற்றுத்திட்டம் ஒன்றை வழங்குவது பற்றி ஆராய்ந்து கொள்ள முடியும்.

அவ்வாறு ஓர் மாற்றுத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தும் பட்சத்தில்,வடக்கு-கிழக்குப்பகுதிகளில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக நிதியைக் கையாளும் விடயத்தில் குறிப்பாக இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியேற்றவும் உட்கட்டமைப்பு வசதிகளை அவசரமாக ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அதற்கான மேற்பார்வையை செய்கின்ற விடயத்திலே முஸ்லிம் தரப்பிலிருந்தும் போதிய பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

இதுபற்றி நோர்வே தரப்பினரிடம் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன்.

அத்துடன், இந்நிதியைக் கையாளும்போது அந்த நாடுகளின் விருப்பத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் ,உதவி வழங்கும் மாநாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் கலந்து கொண்டால்தான் அந்த நாடுகளின் இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டியதன் அவசியம் பற்றி புரிந்து கொள்ள முடியும் என்றார். (உ-10)

ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 55வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 30,31,1ஆம் திகதிகளில் நிலையத் தலைவர் வ. தம்பித்துரை தலைமையில் நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

31ஆம்திகதி மு.ப.6 மணிக்கு யாழ். மாவட்ட ரீதியிலான மரதன் ஓட்டமும் மறு நாள் யாழ். மாவட்ட ரீதியிலான 50 மைல் துவிச்சக்கர வண்டி ஓட்டமும்இடம்பெற்று தொடர்ந்து பி.ப. 6 மணிக்கு பரிசளிப்பு விழாவும கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (உ-8)

கண்காட்சி

(பருத்தித்துறை)

'எழுந்திரு விழித்திரு' சுவாமி விவேகானந்தரின் கண்காட்சி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 9.30மணிமுதல் திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா இந்துக்கல்லூரியில் திருமதி எஸ்.விஸ்வலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-8)

வட-கிழக்கு மீள் நிர்மாண வேலைகளுக்கான

உதவிகளை துரிதப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

உலவங்கியின் வேலைத்திட்டங்களுக்கமைய, வடக்கு-கிழக்கு அவசர புனர்நிர்மாணத்துடன் சம்பந்தப்பட்ட மீள் நிர்மாண வேலைகளுக்கான உதவிகள் உடனடியாக வழங்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் சுகாதாரம் சம்பந்தமான வேலைகளுக்கென 800 மில்லியனும், நீர் விநியோக வேலைகளுக்கென 500 மில்லியனும், கட்டட வேலைகளுக்கென 650 மில்லியனும் மற்றும் ஜீவனோபாய உதவிகளுக்கென 1000 மில்லியனும் ஒத்துக்கப்பட்டுள்ளது.

8 மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களின் உதவியுடன் வடக்கு-கிழக்கு மாகாணசபைகள் இத்திட்டங்களைச் செயற்படுத்தவுள்ளன.

ஜீவனோபாய உதவித்திட்டங்களின் கீழ், வடக்கு- கிழக்கு சமூக புனர்நிர்மாண அபிவிருத்தித்திட்டங்களுகமைய ஒன்றிணைந்த உதவித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 8 மாவட்டங்களுக்கு 265 மில்லியனை உலக வங்கி வழங்கியுள்ளது.

இதனடிப்படையில்,புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்பு மீளக்குடியமர்ந்த ஒவ்வொருவருக்கும உடனடித்தேவைக்கென 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. (உ-8)

புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள்

வியாழக்கிழமை சந்திப்பர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு மிடையிலான சந்திப்பு நாளை வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தின் சூனியப் பிரதேசத்திலுள்ள வவுணதீவு பிரதேச செயலகத்தில் மு.ப.10 மணிக்கு நடைபெறும்.

நேற்று செவ்வாய் இடமபெறவிருந்த இச்சந்திப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தரவை படைமுகாம் தாக்குதலின் 8வதுவருட நினைவு வைபவத்தில் கலந்து கொளளவிருப்பதன் காரணத்தினாலேயே ஒத்தி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பு பிரதிநிதிகள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ் தலைமையிலும்,முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகள் வீடமைப்பு பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தலைமையிலும் கலந்து கொள்வார்கள். (ந)

தென்மாகாண சபை அமைச்சர்

பல்வேறு குற்றங்களுடன்

தொடர்புபட்டவராம்

(கொழும்பு)

தென்மாகாண சபை அமைச்சர் எம்.கே. ரஞ்சித்தின் படுகொலை தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை ,இவர் பல குற்றங்களை முன்னர் புரிந்திருப்பதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். 5 வருடங்களுக்கு முன்னர் வெலியதத பிரதேசசபையின் எதிர்க்கட்சித்தலைவரை படுகொலை செய்தது தொடர்பான குற்றச்சாட்டில அவர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் ,மாகாண சபைத் தேர்தலின் போது வன்முறைகளில் ஈடுபட்டதாகவும் இவர்மீது குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தன. இவரது வீட்டில் சட்ட விரோதமான முறையில் ஆயுதம வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்டு பின்னர் விடு தலை செய்யப்பட்டார்.

இவரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை வெலியத்தையிலுள்ள அவரது குடும்ப மைதானத்தில் நடைபெறவுள்ளன.(உ-5)

மண் சரிவினால்

மாண்டதாகக் கருதப்பட்ட

16 பேர் உயிருடன் மீண்டனர்

(கொழும்பு)

இரத்தினபுரி,மாத்தறைஆகிய மாவட்டங்களில் மண் சரிவில் புதையுண்டு இறந்ததாகக் கருதப்பட்ட 16 பொதுமக்கள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மண் சரிவுகளினால் பாதிக்கப்பட்ட மேற்படி பிரதேசங்களை மீட்புப்பணியாளர்கள் துப்புரவு செயும் போது இந்தப் 16 பேரும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசங்களில் மண்சரிவு அபாயங்கள் மேலும் இருப்பதாக அஞ்சப்படுவதால் மீட்புப் பணிகளைத தொடர முடியாமல் இருப்பதாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருவோர் தெரிவித்துள்ளனர். (தி)

இடைக்கால நிர்வாக சபையை

புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும்

தமிழர் மகாசங்கம் தீர்மானம்

(கொழும்பு)

அடுத்த மாதம் 9,10 ஆம்திகதிகளில் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிற்கு முன்னதாக இடைக்கால நிர்வாக சபையை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அரசாங்கம் ஒப்படைக்க வேண்டும்.

அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்க நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் கே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளினாலும்,பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவினாலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக செயற்பட்டு வரும பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி,சிஹல உறுமய போன்ற கட்சிகளின் செயற்பாடுகளை கண்டிப்பது,

முஸ்லிம் அரசியல் கட்சிகளின் கொள்கையான கிழக்கு மாகாணத்தை தனி அலகாகப் பிரிக்கும் யோசனையைக் கண்டிப்பது ,

வடக்கு -கிழக்கு மாகாணம் தமிழ் முஸ்லிம் மக்களின் தாயகம் என்பதனை ஏற்றுக்கொள்ளல் போன்ற உள்ளிட்ட 10 தீர்மானங்கள் அங்கு நிறைவேற்றப்பட்டன. (தி)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

எமது சபையில் 2003 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றது. கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்தி படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி:- இன்று 28.05.2003- 04.06.2003 நண்பகல் 12 மணிவரை
2. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி .:- 05.06.2003 நண்பகல் 12 மணி வரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 05.06.2003 பிற்பகல் 2 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்விகளை ஏற்கவோ அன்றேல் மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
5. கேள்விப் பத்திரம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு ஒரு பிரதி அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபாலில் அல்லது தலைமைக் காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக்கூடியதாகவும் மறு பிரதி உ.உ.ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.

வேலை விபரம்	மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம்	மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம்	வற்வரி 20%
1) நவாலி வடக்கு சி.எஸ்.ஐ வீதி மீள் புனரமைப்பு	2500/=	300/=	60/=
2) சண்டிலிப்பாய் பழைய கராஜ் முன்வீதி மீள் புனரமைப்பு	3500/=	300/=	60/=

(மீ.விக்டர்)
செயலாளர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(C/6231)

இன்று ஒரு தகவல்

இலத்திரனியல் புத்தகங்கள்

ஓர் எழுத்தாளர் மிகவும் கவலையோடு வந்து, ''என் எழுத்தினுடைய மதிப்பை இந்தச் சனங்கள் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறார்கள் சார்'' என்றார். ''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்றேன். ''இதுவரையும் இருபது புத்தகங்கள் எழுதியிருக்கிறேன். எல்லாம் மளிகைக் கடையில் இருக்கின்றன. கிழித்துப் பொட்டலம் கட்டுவதற்குப் பயன்படுகின்றன என்றார். அது எப்படி மளிகைக் கடைக்குப் போனது? என்றேன். எல்லாம் எடை போட்டு விற்று இருக்கிறார்கள் சார் என்றார். உங்கள் எழுத்தின் நிறை படித்தவர்களுக்குத் தெரிந்திருக்கிறது சார்! அதுதான் எடைபோட்டு விற்றிருக்கிறார்கள்! என்றேன்.

மிகவும் வேதனையோடு சிரித்தார். பழைய பத்திரிகைக் கடையில் போட முடியாத அளவுக்கு ஒரு புத்தகம் எழுதிக் காட்டுகிறேன் பாருங்கள் என்றார். ''அது நிச்சயம் உங்களால் முடியும்!'' என்றேன் எப்படி? என்றார். இன்னும் கொஞ்ச நாட்களில் இலத்திரனியல் (எலட்ரானிக்) புத்தகங்கள் வரப்போகின்றன. அவைகளை அவ்வளவு சுலபமாகக் கடையில் போட்டுவிட முடியாது. பொட்டலம் கட்டவும் உபயோகிக்கப்படாது என்றேன்.

அவருக்கு மிகவும் சந்தோஷம். விபரம் கேட்டார் சொன்னேன். கம்பியூட்டரில் கதை படிக்கும் காலம் நெருங்கிவந்துகொண்டிருக்கிறன்றது. புத்தகம் தலையணை மாதிரி இருக்கிறதே இதை எப்படிக் தூக்கிக்கொண்டு போவதென்ற கவலை வேண்டாம். பெரிய பெரிய அகராதி, கலைக் களஞ்சியம் எல்லாவற்றையும் கம்பியூட்டர் சிப்களில் பதிவுபண்ணி வைத்துக்கொள்ளலாம். இதேமாதிரி இப்பொழுது நாவல்களையும் கொண்டு வருகிறார்கள். அதற்கான ஏற்பாடு இப்பொழுது அமெரிக்காவில் நடந்துகொண்டிருக்கிறது.

கம்பியூட்டரில் கதை படிக்கவேண்டும் என்றால் அதற்கு அடிப்படையாக மூன்று விஷயங்கள் தேவையாம் ஒன்று; கையில் எடுத்துக் கொண்டு போவதற்கு வசதியாக ஒரு குட்டிக் கம்பியூட்டர். இரண்டு; கம்பியூட்டரில் கதையைப் படிக்க உதவுகின்ற சா.ப்ட்வேர். மூன்றாவது; டிஸ்க்குகள். அவ்வளவு தான். கதை டிஸ்கை செருகவேண்டியது, உடனே கம்பியூட்டர் திரைக்கு உயிர் வந்துவிடும். வழக்கமாகப் பச்சை நிறத்திலே, சாம்பல நிறத்திலே திரை தெரியும் அல்லவா? இதில் அப்படியில்லை. புத்தகம் மாதிரியே இருப்பதற்காக வெண்திரை தெரியும். அதில் நாவலின் ஒருபக்கம் தெரியும். அதைப்படிக்கவேண்டியது, படித்து முடித்தவுடன் ஒரு பொத்தானை அழுத்தினால் பக்கம் மாறும். தேவைக்கு தகுந்தமாதிரி பக்கங்களை முன்னே, பின்னே கூடத் திருப்பிப் பார்த்துக் கொள்ளலாம்.

புத்தகத்தில் பண்ணுவது மாதிரியே, அது வரையும் படித்த பக்கம் ஞாபகத்தில் இருப்பதற்காகப் பக்கத்தின் ஒரு மூலையை மடித்து வைக்கவேண்டுமா? வைத்துக் கொள்ளலாம். அதற்கென்று ஒரு பொத்தான் இருக்கிறது. அதை அழுத்தினால் திரையில் தெரிகின்ற பக்கத்தின் மூலையை மடக்கிவைத்துக் கொள்ளலாம். அல்லது ஒரு இலத்திரனியல் கிளிப்பைச் செருகி புத்தக அடையாளமாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

புத்தகத்தில் அடிக்குறிப்பு ஏதாவது போட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை அந்தப் பக்கத்திலேயே வரவழைத்துப் பார்த்துக் கொள்ளலாம். படித்துப் படித்து கண்கள் களைப்படைந்து போகின்றனவா? எழுத்துக்களைப் பெரிது படுத்திக் கொள்ளலாம். வீட்டில் விளக்குகள் அணைத்து விட்டால்கூட பக்கதில் தூங்குகிறவர்களுக்குத் தொந்தரவில்லாமல் நாம் கதை படிக்கலாம். ஒரு நாவலில் நாற்பதாவது பக்கம் நாம் படித்துக்கொண்டிருக்கிறோம், அதில் வருகிற ஒரு கதாபாத்திரம்... நாலாவது பக்கத்தில் என்னவோ சொல்லியதே அது என்ன என்கிற சந்தேகம் வருகிறதா? உடனே அந்தப் பக்கத்தில் உள்ள குறிப்பை வரவழைத்துப் பார்த்துக் கொள்ளலாம்.

ஒரு குறிப்பிட்ட வார்த்தை இந்த நாவலில் எத்தனை தடவை வந்திருக்கிறது என்று நொடியில் கண்டுபிடித்துவிடலாம். படிப்பதற்குச் சிரமமாய் இருக்கின்றதா? ஹெற்போனை எடுத்து மாட்டிக் கொள்ளலாம். காதில் அது கதைசொல்ல ஆரம்பித்து விடும். கதையோடு சேர்ந்து அவ்வப்போது படங்களும் பார்க்கலாம். சினிமா மாதிரிக் காட்சிகளும் இதில் ஓடும்.

இப்பொழுது நடந்துகொண்டே காதில் மாட்டிப் பாட்டுக்கேட்டு கொண்டு போகிறோமல்லவா ''வாக்மேன்!'' அது மாதிரி இதற்குப் ''புக்மேன்'' என்று பெயர்கொடுத்திருக்கிறார்களாம் அதுசரி! இயந்திரம் வளர்கின்ற அளவுக்குச் சிந்தனைகள் வளர வேண்டுமே! அப்போது தானே நல்ல புத்தகங்கள் வரமுடியும். அது எப்படி வருவது? நான் சொல்லிக்கொண்டு வந்த இவ்வளவு விபரத்தையும் எதிரில் இருந்த எழுத்தாளர் கேட்டுக்கொண்டே வந்தார். மிகவும் சந்தோஷம் சார் என்றார்.

பிறகு ஒரு சந்தோஷமான சமாச்சாரம் சார்! என்றார். என்ன என்று கேட்டேன். இந்த வருஷம் சிறந்த இலக்கியசேவை செய்ததற்கான இலக்கிய விருது எனக்குத்தான் சார் கொடுத்திருக்கிறார்கள் என்று மிக அடக்கமாகச் சொன்னார். அப்படியா! சொல்லவே இல்லையே! அதுசரி! இந்த வருஷம் புதிதாக புத்தகம் எதுவும் நீங்கள் எழுதவில்லைப்போல் இருக்கிறதே என்றேன். ஆமாம் சார்! நான் எதுவும் எழுதவில்லை அப்படி எழுதாமல் இருந்ததே இலக்கியத்துக்கு நான் செய்த பெரிய சேவையாகக் கருதி இந்த விருது வழங்குவதாக அதை என் கையில் கொடுக்கும் பொழுது சொன்னார்கள் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் போன்று

சீருடை அணிந்திருந்த இருவரே அமைச்சரை பிஸ்டலால் சுட்டனர்

சம்பவ இடத்தில் கடமை புரிந்த சிப்பாய் சாட்சியம்

(கொழும்பு)

தென்மாகாணசபை அமைச்சர் எம்.கே.ரஞ்ஜித் படுகொலை விசாரணை, மாளிகாகந்த மஜிஸ்ரேட் சறோஜினி குகலா வீரவர்த்தன முன்னிலையில் நடைபெற்றபோது, சம்பவம் நடைபெற்ற இடத்தில் கடமையில் நின்ற இராணுவ வீரர் ஒருவர் சாட்சியம் அளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில்,

நிறுத்தப்பட்டிருந்த இராணுவ வாகனங்களின் சாரதிகள் வாகனங்களில் இருக்கிறார்களா என்பதைக் கண்காணிக்கும் பணியில் நான் ஈடுபட்டிருந்தேன்.

திடீரென்று துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் நான் சுவீப்பிக்கற்விற்கும் சிறு கடையொன்றின் பின்னால் மறைந்து நின்று நடப்பவற்றை அவதானித்தேன்.

சீ.ஐ.டி கட்டடத்திற்கு எதிர்ப்பக்கமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த கறுப்புக் கண்ணாடி காரினுள்ளிருந்து, அரைக் கை சேட் அணிந்த இருவர் இறங்கி வந்தனர். கட்டட நுழைவாசலில் நிலத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடந்த ஒருவரின் கழுத்தில் இருமுறை பிஸ்டலால் சுட்டனர். அதன் பின்னர் அந்த மனிதர் அசையாமல் கிடந்தார்.

பின்னர், அந்தக் காரின் பின்னால் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவில் ஏறினர். உடனே அந்தக்காரும, ஓட்டோவும் அங்கிருந்து கிளம்பிவிட்டன. வாகனத்தில் ஏறமுன் வானத்தை நோக்கியும் சுட்டனர். நலல உயரமுடைய அவர்கள் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் போன்று சீருடை அணிந்திருந்தனர்.

துப்பாக்கிச் சூடு நடந்தவுடன் அங்கு ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. பச்சை சேட் அணிந்த ஒருவர் இறங்கி அதுபற்றி விசாரித்தார். இவ்வேளை, காரில் இருந்த ஒருவர் இறங்கி மோட்டார் சைக்கிள் மனிதர் மீது சுட்டார். அம்மனிதர் உடனே சீ.ஐ.டி. கட்டிடத்தினுள் ஓடி மறைந்துவிட்டார்.

முதல் தடவை சுட்டபோது, குறித்த நபர் நிலத்தில் வீழ்ந்து துடித்தார். சுட்டவரை நான் காணவில்லை. ஜனாதிபதி பாதுகரப்புப் பிரிவினரின் சீருடையை எனக்குத் தெரியும் என்று அவர் கூறியுள்ளார். (உ)

இடைக்கால நிர்வாகத்திற்குப் பதில் உயர் நீதி நிர்வாகக் கட்டமைப்பு

அரசு ஆலோசித்து வருகிறதாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் பிரேரிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகத்திற்குப் பதிலாக உயர் நிதி நிர்வாக அதிகாரக் கட்டமைப்பை உருவாக்க அரசு ஆலோசித்து வருவதாக அரச வட்டாரங்கள தகவல் வெளியிட்டுள்ளன.

இதன் பிரகாரம் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு புனரமைப்புக்கென உயர் நிதிநிர்வாக அதிகாரக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்றும் இந்த அமைப்பினை உருவாக்குவதில் உலக வங்கியின் மேற்பார்வை செய்கின்ற நிதியத்துடன் மேலதிகமான விசேட நிதியம் ஒன்றும் உருவாக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் இந்த மாற்று யோசனையின் படி அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சம அதிகாரங்களைக் கொண்டிருப்பார்கள் என்றும் ஆனால், அரசியல் அதிகாரங்கள் அவற்றில் உள்ளடக்கப்படமாட்டாது எனவும் கூறப்படுகிறது.

மேலும் இத்தகைய மாற்றுத்திட்டத்தின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் நேரடியாகப் பங்குகொள்ளும் வாய்ப்பு இருப்பதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-10)

இராசி பலன்

28. 05. 2003

(வைகாசி 14, புதன்)

திரயோதசி முழுவதும்
அச்சுவினி பி.ப. 6.28 வரை
இராகுகாலம் 11.52 - 1.22
சுபநேரம் 4.22 - 5.52

பிரதோச விரதம்

மேடம்

ஜனவசியம், நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி, விருந்துபசாரம்.

இடபம்

உணர்ச்சி வசப்படல், உஷ்ண நிலை, காரிய அலைச்சல், வேலைக் கஷ்டம்.

மிதுனம்

மனமகிழ்ச்சி, புதிய சாதரியம், போசன சுகம், பொருள்சேர்க்கை.

கடகம்

சுபநிகழ்வு, உற்சாகம், தொழில்சிறப்பு, தூரதேசச் செய்தி.

சிங்கம்

புதிய திட்டமிடல், லட்சுமிகரம், காரிய தாமதம், பிரயாணம்.

கன்னி

பிறருக்கு உதவுதல், ஆரோக்கியக் குறைவு, காரிய தடங்கல், பிரயாண பயம்.

துலாம்

அதிக வருமானம், கலந்துரையாடல், காரிய சித்தி, வசீகரம்.

விருச்சிகம்

நோய் குணமடைதல், சத்துருஜெயம், காரிய அனுகூலம், சந்தோஷமான சம்பவம்.

தனுசு

வியாபார விருத்தி, மனச்சோர்வு, குடும்பக் கவலை, உத்தியோகத்தர் ஒத்துழைப்பு.

மகரம்

மாணவர் கல்வியில் ஆர்வம், தன்னம்பிக்கைக் குறைவு, தாய்வழி உறவு, நிலைகேடு.

கும்பம்

கூட்டுமுயற்சி, புதியபொருள் சேர்க்கை, அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி.

மீனம்

மாதர் நட்பு, அதிகவார்த்தை, வீண் செலவு, நல்ல முயற்சி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

சர்வதேச உதவியுடன்

மண்சரிவில் பாதிப்புற்றோர்க்கு காணி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

மண்சரிவினால் வீடுகளை இழந்தவர்களுக்கு 20 பேர்ச் காணியை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரச முகாமைத்துவ குழுவின் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக காணி அமைச்சர் ராஜித சேனரட்ணாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாகவும், நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு காணிகளைப் பெறும் குடும்பங்களுக்கு அக்காணிகளுக்குள் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் உதவிகளை நாடவுள்ளது.

இயற்கை அனர்த்தம் காரணமாக 25 ஆயிரத்து 534 வீடுகள் முற்றாக அழிந்துள்ளதுடன் 25 ஆயிரத்து 481 வீடுகள் வெள்ளத்தினால் சேதமுற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

புலமைப் பரிசில் நிதியில் எவ்வித குறைப்பும் செய்யவில்லை

ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து புலமைப் பரிசில்களுக்காக வழங்கப்படும் நிதியில் எந்தவித குறைப்பும் செய்யப்படவில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

பாராளுமன்றச் சட்டமூலத்தில் அபிவிருத்தி லொத்தர் சபைக்குக் கிடைக்கும் அனைத்து வருமானமும் ஜனாதிபதி நிதியத்துக்கு வழங்கப்படவேண்டும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய புலமைப்பரிசில் திட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், மகாபொல புலமைப்பரிசில் திட்டத்துக்கு வழங்கப்படும் நிதி 15 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் புலமைப் பரிசில்களுக்கு வழங்கப்படும் பணத்தில் எந்தவிதக் குறைப்பும் செய்யப்படவில்லை என ஜனாதிபதி அங்கு தெரிவித்துள்ளார்.

மகாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நிதியம் ஊடாக இவ்வருடம் 8ஆயிரத்து 200 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (தி)

புகைப்பொருள் எதிர்ப்பு தினம்

(சித்தன்கேணி)

சர்வதேச நல்லொழுக்க சம்மேளனம் நடாத்தும் சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்புத் தினம் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அளவெட்டி பாரதி சனசமூக நிலைய முன்றலில் சி.இராசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக வைத்திய கலாநிதி ஏ.யோகராசா, இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எம்.திருநாவுக்கரசு, அளவெட்டிப் பங்குத் தந்தை வண.பிதா ம.பெ.ஞானரட்ணம், தீவகப் போருட் திட்டப் பணிப்பாளர் ப.வ.மூர்த்தி மற்றும் வீ.ரவீந்திரன், சித்தன்கேணி போருட் திட்டப்பணிப்பாளர் எஸ்.தவராசகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-8)

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்
– குறள்

வலம்புரி

இறுதிச் சந்தர்ப்பம்

அரசுக்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் ஆறு சுற்றுக்களுடன் ஸ்தம்பித்தி ருந்தாலும், மீண்டும் சமா தான முயற்சிகள் தொடரும் என்ற நம்பிக்கை இன்னமும் இருக்கவே செய்கிறது.

சமாதானப் பேச்சுக்களைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளின் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்கு கால அவகா சம் உண்டு. அதாவது ஏழாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு, காலவரை யறை இல்லை. எனவே, விடு தலைப் புலிகளின் கோரிக் கையைப் பரிசீலிப்பதற்கு அரசு கால அவகாசம் எடுத் துக்கொள்ளலாம். ஆனால், ஜப்பானில் நடைபெறவுள்ள டோக்கியோ மாநாடு திகதி நிர்ணயிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

இம்மாநாட்டில் விடுதலைப் புலிகளைப் பங்குகொள்ளச் செய்வதாயின், விரைவான முடிவுகளை எடுப்பது அரசின் கடப்பாடாகும். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் காலத்திற்கு காலம் நடைபெற்று வந்தமை சாதா ரண நடைமுறையாக இருந்த போதிலும், அடுத்த மாதம் ஜப்பானின் தலைநகரில் நடைபெற இருக்கும் மாநாடு வித்தியாசமானது.

அரசும்-புலிகளும் யுத்த நிறுத்தம் செய்துகொண்டு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ள நிலையில், நடைபெறும் மாநாடு என்ப தற்கு அப்பால், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையை கட்டியெழுப்ப சர்வதேச சமூ கம் உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்ற நோர்வே அரசின் உருக்கமான வேண்டு கோளின் மத்தியில்-சர்வ தேசத்தின் பார்வை முழுவ தும் இலங்கையின் பக்கம் திரும்பியுள்ள சாதகமான சூழ்நிலையில் நடைபெறுகி ன்ற மாநாடு என்பதால், இதில் விடுதலைப் புலிக ளைப் பங்குகொள்ளச் செய் வது சர்வதேசத்தின் அழுத் தங்களில் இருந்து இலங்கை தன் னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஓர் அவசர தேவையாக உள்ளது.

சுதந்திரம் என்ற கோஷத்தை உரத்துக் கூறியதன் காரண மாகவே, இலங்கைக்கு தாரா ளமாக உதவி செய்ய தனவந்த நாடுகள் முன்வந்துள்ளன.

இலங்கையைப் பொறுத்த வரை அதற்கு சர்வதேசரீதியில் பகைமை நாடுகள் கிடை யாது. சுருங்கக் கூறின் சர்வ தேசம் முழுவதிலும் நட்புக் கும், இரக்கத்திற்கும் உரிய நாடாகவே இலங்கை இருக் கிறது. இதனால் இலங்கைக்கு உதவ உலகநாடுகள் தயார்.

ஆனால், உள்நாட்டில் இடம்பெறும் இனயுத்தம் இலங்கையின்மீது அவநம்பிக் கையை ஏற்படுத்தி உள்ளது. இந்த அவநம்பிக்கையைப் போக்குவதாயின், ஜப்பான் மாநாட்டில் அரசும், புலிகளும் இணைந்து- சேர்ந்து செல்வதே ஒரே வழி. இதற்கான இறுதிச் சந்தர்ப்பமும் இதுவே. இதனை அரசு தவறவிடுமாயின், சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதிலும் அர்த்தமில் லாமல் போவது உறுதி.

தமிழீழ காவல்துறைக்கு சர்வதேச தர பயிற்சி வழங்க பிரிட்டன் உதவும்

பிரி. இராணுவ உயரதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பொலிஸ் படைக்கு சர்வதேச பொலிஸ மூலம் பயிற்சிகளை வழங்கவும், வடக்கு-கிழக்கு மற்றும் தென்பகு தியிலுள்ள இலங்கை பொலிஸா ருக்கிடையே தொடர்புகளை ஏற் படுத்துவதற்கும் ஆங்கில மொழியை தொடர்பு மொழியாக பயன்படுத்து வதற்கும் பிரிட்டன் உதவி செய்யும் என பிரித்தானிய இராணுவ அதி காரி ஜெனரல் மைக்கல் ரோஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தினரின் மொழித்திறனை அதிகரிப்பது தொடா பான ஆலோசனைகளை வழங்குவ தற்காக அரசாங்கத்தினால் அண் மையில் அழைக்கப்பட்ட இவர், ஆலோசனைகளை சிபார்சு செய் திருந்தபோதே இதனைத் தெரி வித்திருந்தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளி யிடுகையில் ,

பல விடயங்களில் இராணுவத் தினரை விட விடுதலைப்புலிகள் முன்னிலையில் செயற்பட்டு வரு கின்றனர். அதற்குக்காரணம் படை யில் காணப்படும் சில குறைபாடு களே. குறிப்பாக தந்திரோபாய நட வடிக்கைகளில் காணப்படும் பற்றாக் குறை,பாதுகாப்புத தவறுகள்,நிர்வாகச் சீர்கேடுகள்,போதிய உபகரணங்கள் இன்மை போன்றன இலங்கை அரச படையினரிடம் காணப்படுகின்றன.

அத்துடன்,இராணுவத்தின் மத் திய மற்றும் கனிஷ்ட நிலையினர் மத்தியில் நம்பிக்கையீனம் அதிகரித் துளளது.அதற்கு உயர் படைத்தள பதிகளின் தலைமைத்துவம் காரண மாகும்.

இதற்காக இராணுவத்தின் அடிப் படைக்கட்டுமானங்களில் மாற்றங் களைச்செய்யவேண்டும்.படைச் செயற் பாடுகள், பயிற்சிகள், நடைமுறைகள், தனிப்பட்ட நிர்வாகம்,தேவைப்படும் உபகரணங்கள்,எல்லாவற்றையும் குறித்து இந்த அடிப்படைக் கட்டமைப் பின்போது கவனத்தில் எடுக்க வேண் டும்.

அதேவேளை,சமாதான முயற்சி களில் ஐரோப்பிய யூனியனின் உத வியை இலங்கை பெற்றுக்கொள் ளலாம். அமைதியை முன்னெடுக்க நடு நிலையான சர்வதேச அமைப் பின் உதவி இலங்கைக்கு தேவைப்படு கிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான புகார்கள் யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிய விடயங்களைக் கவனிக்க இத்தகைய அமைப்பு தேவை என்றும் ,

ஏன்என்றால் ஸ்கன்டிநேவிய போ நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினால் அவ்வளவு செயலாற்றுகை யுடன் செயற்பட முடியாது. ஆனால் ஐரோப்பிய யூனியன் இந்த விடயத் தில் உதவலாம் என்று கூறியுள் ளார்.

இவர் பிரிட்டனில் எஸ்.ஐ.எஸ் வான் சேவைப்பிரிவு அதிகாரியாக வும் பெஸ்னியாவில் ஐ.நா. அமை திப்படைகளின் தளபதியாகவும் கடமையாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

இலஞ்ச ஊழல்

குற்றத்தடுப்பு ஆ. குழுவுக்கு எதிராக மனுத்தாக்கல்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் குற்றத்தடுப்பு ஆ ணைக் குழுவுக் கு எதிராக கொழும்பு மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் அடிப்படையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட அல்பிட்டிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ். எம். ரணசிங்க இம் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழு வின் தலைவர் உட்பட 5 பேர் பிரதி வாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள் ளனர்.

3ஆணையாளர்கள் தலைமை யில் ஆணைக்குழு இயங்க வேண் டிய போதிலும் ஆணையாளர் ஒரு வர் இறந்துள்ளதால் அவரின் வெற் றிடத்துக்கு இதுவரை எவரும் நிரப் பப்படாமல் இரு ஆணையாளர்கள் தலைமையில் ஆணைக்குழு இயங்கி வருவதாகவும்,

17வது அரசியல் திருத்தச் சட்டத் துக்கு ஏற்ப இலஞ்ச ஊழல் குற்றத் தடுப்பு ஆணைக்குழுவின் நடவடிக் கைகள் சட்டபூர்வமற்றது எனவும் அம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

பாதிப்புற்ற மக்களின் மேம்பாட்டுக்கு ஜசாக் நிறுவனம் பல்வேறு திட்டங்கள்

(ஈச்சமோட்டை)

போரினாலும் வேறு காரணங் களாலும் பாதிக்கப்பட்ட யாழ். மக் களின் நலன் கருதி யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையம் 'ஜசாக்' பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றது.

சிறுவர்கள் ,பெண்கள், முதியோர் கள் உட்பட அனைத்துத் தரபின ருக்கும் சமூக மேம்பாடு கருதிய சேவை களை வழங்குவதே இந்த சமூக செயற்பாட்டு மையத்தின் நோக்க மாகும்.

இதன் திட்டத்தின் கீழ் வறிய, இடமபெயர்ந்த மாணவர்களுக்கான சிறுவர் மையம் அமைக்கப்பட்டு அவர்களுக்கான இலவச மாலை நேர வகுப்புகள் செயற்படுத்தப் படுகின்றதோடு ,முதியோருக்கான நூலக வசதியுடன் கூடிய இளைப் பாறல் பிரிவு அமைக்கப்படுகின்றது.

மேலும் ,விதவைகளுக்கான சுய தொழில் பயிற்சியும் சந்தைப் படுத்தல் வாய்ப்பும், பாதிக்கப்பட்ட பெண்கள் தமது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளும் வரை தங்குவதற கான தற்காலிக தங்குமிடமும் ஏற் படுத்தப்பட்டு வருகின்றது.

பெண்கள் ,சிறுவர்களுக்கு இம் மையத்தின் மூலம் இலவச சட்ட ஆலோ சனைகளும் வழங்க ஏற்பாடாகியுள் ளது.

தமது சேவைகளைப் பெற விரும் பும் பாதிக்கப்பட்ட மக்கள் 4ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மேற்படி அலுவலகத்து டனோ அல்லது பழைய பூங்கா வீதி யில் அமைந்துள்ள கிளையிலோ தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக் கப்பட்டுள்ளது. (உ-59)

எதிர்கால உலகத் தலைவர்கள் மாநாடு 7 தமிழ் மாணவர்கள் அமெரிக்கா செல்வர்

(கொழும்பு)

எதிர்காலத்தில் நாட்டின் தலை வாகளாக, சர்வதேச அரங்கில் இராஜ தந்திரிகளாக வரவேண்டும் என்ற இலட்சியம் படைத்த 37 இலங்கை மாணவர்கள் 2003 ஆண்டிற்கான எதிர்கால உலகத் தலைவர்கள் மாநாட்டு ஆலோசனைக் கூட்டத் தில் பங்குபற்றுவதற்காக அமெரிக்கா வுக்குச் செல்லவுள்ளனர்.

மேற்படி 37 மாணவர்களில் 7 பேர் தமிழர்கள் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இந்த மாநாட்டில் 37 நாடுகளைச சேர்ந்த 16-19 வயதுக்கு இடைப் பட்ட 370 மாணவர்கள் பங்குபற்றவுள் ளனர்.

அமெரிக்காவின் தேசிய தினமா கிய எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி அமெரிக்காவின் ஜோர்ஜ்வுண் சர்வகலாசாலையில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

1996ஆம் ஆண்டு உருவாக்கப் பட்ட மேற்படி அமைப்பின் வருடாந்த மாநாட்டில இம்முறையே இலங் கையிலிருந்து அதிகளவான மாண வர்கள் பங்குபற்றவுள்ளனர். (த)

திசைரி தியானம்

எழுந்து செயல்படு

அழுது கொண்டிராமல் உழுதுகொண்டிரு. என்றாவது ஒரு நாள் ஏராளமான மழை பொழியும். நல்ல அறுவடை கிடைக்கும் அதுபோல ஒழுக்கத்தில் நிலைபெற்று யோகசாதனை செய்தால் ஒரு நாள் உன்னதமான அமைதியையும் எல்லையற்ற பேரின் பதையும் அடைவாய். ஓ! இராமா! உன்னிடத்தில் நீ புனிதன் ஆகத் தக்க அனைத்தும் பொருந்தியுள்ளன. சிறு விண்ணப்பம், தீவிரமான தியான உன்னுள் இருக்கும் மின் பொறியை தீப்பற்றவைக்கப் போ உணர்க.

சுவாமி சிவானந்தர்

விவசாயக்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நாளை வியாழக் கிழமை யாழ். செயலகத்தில் நடை பெறவுள்ளது. இக்கூட்டத்தில் விவ சாய நடவடிக்கைகள், நீர் விநி யோகம் என்பன தொடர்பாக கலந் துரையாடப்படவுள்ளது. (உ-7)

காணி அமைச்சர் யாழ்.வருவார்

(யாழ்ப்பாணம்)

சமாதான வியைாட்டு விழா தொடர்பான முன்னோடிக் கலந்துரை யாடலின பொருட்டு காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண யாழ்.வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம்திகதி முதல் 7ஆம் திகதி வரை யாழ்.குடாநாட்டில் சமாதான விளையாட்டு விழா நடாத்துவது தொடர்பான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 2ஆம் திகதி செயலக மாநாட்டு மண்டபத்தில் காணி அமைச் சர் ராஜித சேனாரட்ண தலைமை யில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட தமிழ் பாராளுமன்ற உறுப் பினர்களும் கலந்து கொள்ளவுள்ள னர். (உ-7)

கூ. ச. பணிப்பாளர் சபைத் தேர்தல்

அரசியல் கட்சி உறுப்பினர்கள் போட்டியிட முடியாது

(கொழும்பு)

கூட்டுறவுச் சங்கங்களின் குழுக் கள் மற்றும் பணிப்பாளர்சபைகளுக் கான தேர்தல்களில் எந்தவொரு அரசியல கட்சிகளில் அங்கம் வகிப்ப வர்களோ,தொழிற்சங்கங்களில் பதவி வகிப்பவர்களோ போட்டியிடு வதற்கு தகுதியுடையவராக இருக்க மாட்டார்கள் என கூட்டுறவுத்துறை யின் அபிவிருத்திக்கான பிரேரணை கள் மற்றும் உபாயங்கள் தொடர் பான அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவின் பணிப்பின் பேரில் மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கரு ஜெயசூரியா, கூட்டுறவுத்துறை அமைச்சர் ஒ.ஆர். எம். அப்துல் காதர் ஆகியோரின் ஆலோசனை யின் பேரில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு அமைச்சின் செயலா ளர் சுமணசிறி ஹலுகல்ல தலை மையில் கூட்டுறவாளர்களும், கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி களும் இணைந்து இந்த அறிக்கை யைத் தயாரித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கூட்டுறவுச சங்கங்களின்,பணிப்பாளர் சபையில்,நிதி, முகாமைத்துவம், வர்த்தகம் ஆகியவற்றில் அனுப வம் அறிவுடைய மூவர் தெரிவு செய் யப்பட வேண்டும்.

இச்சபையின் பதவிக் காலம் 3 வருடமாக இருப்பது உசிதமாகும்.

கூட்டுறவு ஊழியர்களின் பிரச் சினைகளைத தீர்ப்பதற்கு மூவர் கொண்ட குழுவொன்று இருக்க வேண்டும் என்றும் அந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம)

லொத்தர் சபைக் கொடுப்பனவுகளை நிறுத்தி வைக்குமாறு ஜனாதிபதி உத்தரவு!

சபைத் தலைவர் ஏற்க மறுப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையின மீள் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகள் அனைத்தையும் நிறுத்துமாறு அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் ஜே.கே.பெனான்டோவுக்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி கையேற்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஊடகத் துறை அமைச்சரின் தடை உத்தரவு காரணமாக இது வரை பிரசுரிக்கப்படவில்லை.

இதன் காரணமாக ஜனாதிபதிக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் இடையில் பெரும் கசப்புணர்வும்,அபிவிருத்தி லொத்தர் சபை கையேற்பு தொடர்பான சட்டசிக்கல்களும் தோன்றியுள்ளன.

இந்நிலையில் அபிவிருத்தி லொத்தர் சபையின் மீள் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய அனைத்து கொடுப்பனவுகளையும் மற்றும் புதிய நியமனங்கள் வழங்குவதையும் உடனடியாக நிறுத்துமாறு அபிவிருத்தி லொத்தர் சபைத் தலைவருக்கு ஜனாதிபதி கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் மேற்படி அறிவுறுத்தல் கடிதம் தொடர்பாக பதிலளித்துள்ள அபிவிருத்தி லொத்தர் சபைத் தலைவர், அபிவிருத்திலொத்தர் சபைக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் மிலிந்த மொறகொட உத்தரவிட்டால் மாத்திரமே ஜனாதிபதியின் உத்தரவை நிறைவேற்றமுடியுமெனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அபிவிருத்தி லொத்தர் சபையைக் கையேற்பது தொடர்பாக ஜனாதிபதி பிரதமருடன் கலந்தாலோசித்திருக்க வேண்டுமென சட்டமா அதிபர் கருத்து தெரிவித்துள்ள போதிலும் சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தை பெறவேண்டிய அவசியம் எனக்கில்லை அத்துடன் எனது தீர்மானம் சட்டவிரோதமானதுஎன சட்டமா அதிபர் எந்த வொரு இடத்திலும் குறிப்பிடவில்லை. தீர்மானம் சட்டவிரோதமானது என யாரும் கருதினால் அதனைத் தடுக்க சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கலாம் அதனை விடுத்து எனது தீர்மானத்தை நடை முறைப் படுத்த விடாமல் அரசாங்க அச்சகருக்கு ஊடகத்துறை அமைசர் விடுத்துள்ள உத்தரவு தவறானது எனவும் இத்தடை உத்தரவை ஊடகத்துறை அமைச்சர் நீக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி அக்கடிதத்தில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (த)

புலிகளின்...

ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான அரசுக்கு இருப்பதானால் அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என தான் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

இந்திய...

வெளியிட்டுள்ளன.

இதேவேளை,இந்திய இராணுவ அதிகாரிகள் குழு கோட்டையில் அமைக்கப்பட்டு தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ள இராணுவ முகாம் பகுதியை பார்வையிட்ட பின்னர் உடனடியாகவே கொழும்பு திரும்பினர்.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணம் வந்த இந்தியஇராணுவ உயரதிகாரிகள் அண்மையில் தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்கள், மண் சரிவுகளினால் பாதிப்புற்ற மக்களின் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வந்தவர்கள் என்றும் இவர்களின் யாழ்ப் பாண விஜயம் அசாதாரணமான தொன்றல்ல என்றும் இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எதுவாயினும்,1989-ம் ஆண்டு இந்திய அமைதிப் படை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய பின்னர் இந்திய இராணுவ உயரதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்திருப்பது இதுவே முதற் தடவையாகும்.

இந்திய இராணுவ அதிகாரிகளுடன் காணி அமைச்சர் ராஜித சேனாரத்தினாவும் யாழ்ப்பாணம் வந்து சென்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம.உ-7,7,4,43)

வெளிநாட்டு...

இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா மேலும் கூறினார்.

இதேவேளை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்குமாறு அரசாங்கம் ளாக்சோல்ஹெய்மிடம் ஒப்படைத்த கடிதத்தில் இடைக்கால நிர்வாக சபைக்கு மாற்றீடாக,இணைக்கும் சபை அல்லது ஒன்றிணைந்து செயற்படும் சபை ஒன்றினை நிறுவி அதன் மூலம் வெளிநாட்டு உதவியுடன் வடக்குக் கிழக்கு மாகாண புனரமைப்பு விடயங்களை செயற்படுத்தலாம் என்று குறிப்பிட்டிருப்பதாக, தகவல் வெளியாகியுள்ளது. (இ)

பாடுமீன் எதிர் சென்.நீக்கிலஸ்

உதை பந்தாட்டத்தில் நடுவர் மீது தாக்குதல்

(சுண்டிக்குளி)

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற உதை பந்தாட்டப் போட்டியில் ஏற்பட்ட களேபரத்தினால் போட்டிக்கு நடுவராகக் கடமையாற்றியவர்,மிக மோசமாக தாக்கப்பட்டு மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாசையூரைச் சேர்ந்த எஸ்.யூட் குமார்(வயது25)என்பவரே மோசமாகத் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் ஆவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,யாழ்.உதை பந்தாட்ட லீக் நடாத்தும் உதை பந்தாட்டப் போட்டியில் நேற்றுப் பிற்பகல் 5மணிக்கு நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியும் குருநகர் பாடும்மீன் அணியும் விளையாடின.

ஆட்டத்தின் போது சென்.நீக்கிலஸ் அணி,ஒரு கோல் போட்டு முன்னணியில் விளையாடிக் கொண்டிருந்த வேளை திடீரென பாடுமீன் அணி வீரர் ஒருவர் நக்கலஸ் அணி வீரர் ஒருவரை மைதானத்தில் வைத்துத் தாக்கியுள்ளார்.

இதனையடுத்து நடுவர் பிரஸ்தாப பாடுமீன் அணி வீரருக்கு சிவப்பு அட்டை காட்டினார்.இதனால் ஆத்திரமடைந்த பாடுமீன் அணியின் மற்றொரு வீரர் நடுவரைத் தாக்க முயன்றபோது நடுவர் மைதானத்தை விட்டு வெளியே ஓடிய வேளை பார்வையாளர்களாக இருந்த பாடுமீன ஆதரவாளர்கள் கும்பலாக நடுவரைத் தாக்கியுள்ளனர்.

மூர்க்கத் தனமாகத் தாக்கப்பட்டதால் மயக்கமடைந்த நிலையில் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து ஏற்பட்ட களேபரத்தினால் போட்டியும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. (இ-110)

பலாலி...

பலாலியைத் தவிர்ந்த ஏனைய உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக் குடியமர்வதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. அதற்கு தேவையான முழு ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது குறித்து ஆராய்வதற்கு குழு ஒன்றை அமைத்து செயற்படுத்த வுள்ளேன்.

பேச்சுவார்தை மூலமே இந் நாட்டுமக்களுக்கு ஒரு விடிவு காலத்தை ஏற்படுத்தமுடியும். கால தாமதம் இன்றி நேரடியார்க தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சு வார்தையில் ஈடுபடுவது மிகவும் முக்கிய மான நடவடிக்கை ஆகும். இதன் மூலமே நீடித்ததும், இலகுவானதும், நிலையானதுமான தீர் வொன்றை விடுதலைப் புலிகள் காணமுடியும்.

இதனை இணைந்து கதைத்து செயற்படுத்துவதற்கு நான் தயாராகவும் ஆயத்தமாகவும் இருக்கின்றேன்.

இவ்விடயங்கள் குறித்து விடுதலைப்புலிகள் என்னோடு மனம் திறந்து பேசவேண்டும். விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர் வாகசபை கோரிக்கை குறித்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமோ அல்லது விடுதலைப் புலிகளோ என்னோடு எதுவும் பேசவில்லை.

நான் ஜே.வி.பி.யுடன் கூட்டு சேர்வதனால், தமிழர்களின் பிரச்சினை விடயத்தில் எதுவித மாற்றங்களையும் ஏற்படுத்த மாட்டேன். இதனை ஜே.வி.பி யினருக்கும் தெளிவாகக் கூறியுள்ளேன்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் நான் மிகவும் அக்கறை கொண்டிருக்கின்றேன். பொருத்தமான காரணங்களைக் காட்டி சிறிய சிறிய குற்றங்களுக்கும், குற்றத்தின் தன்மைக்கும் ஏற்ப, அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி, விடுதலை செய்வேன் என்று. அமைச்சரிடம் உறுதியளித்த ஜனாதிபதி யாழ்ப்பாணத்திலிருந்து 200 புத்திஜீவிகளை அழைத்து வந்து மூன்று நாள் கருத்தரங்கொன்றை ஒழுங்கு செய்யும் படியும் அதன் மூலம் யாழ்ப்பாண மக்களின் மனநிலையையும் அபிப்பிராயங்களையும் அறிந்து கொள்ளத் தான் ஆவலாக இருப்பதாகவும் அதற்கான நடவடிக்கையை எடுக்குமாறும் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனை ஏற்றுக் கொண்ட அமைச்சர் மகேஸ்வரன் கருத்தரங்குக்கு ஒழுங்கு செய்வதாக ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளை மிகவும் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் விளக்கிக் கூறிய அமைச்சர் மகேஸ்வரன் 1994ம் ஆண்டு தங்களிடமிருந்த சமாதான மனநிலையைத்தான் தமிழ் மக்கள் இன்று எதிர்பார்க்கின்றார்கள் என்று ஜனாதிபதியிடம் கூறினார்.

மேலும் விடுதலைப்புலிகளோடு இணைந்து தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வைக் காண பாடுபடவேண்டும் என்றும் அமைச்சர் ஜனாதிபதியைக்கேட்டுக் கொண்டார். (இ)

கூட்டணித் ...

தீர்வு காணப்படுவதையே நாம் விரும்புகிறோம்.ஆனால் எம்மீது போர் திணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன், விடுதலைப் புலிகள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுவது ஊடகங்களின் கற்பனைக்கதையாகும் என்று கூறிய தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உள்ள அனைவரும் அதன் குறிக்கோளை நோக்கிச் செல்வதாகவும், புலி உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் பணிகள் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், அதனால் அவர்கள் மத்தியில் எதுவித போட்டிக்கும் இடம் இல்லை.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் உடல் நலக்குறைவு காரணமாகவே அவர் பொறுப்பை நான் ஏற்றுள்ளேன்.அவர் தற்போது சுகம் பெற்று வருகிறார்.அடுத்த கட்டப் பேச்சில் அவர் கலந்து கொள்வார் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறினார். (ம)

சிப்பாய் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தனங்கிளப்பில் கடந்த 26ந் திகதி காவலரணில் காவற்கடமையில் இருந்த போது காணாமல் போன இராணுவச்சிப்பாய் நேற்று தனங்கிளப்பு வெளியில் பிணமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது குறித்து படைத்தரப்பினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

பிக்குகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

டோக்கியோவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டுக்கு விடுதலைப்புலிகளை அனுமதிக்கக்கூடாது என்று கோரி தேசிய பௌத்த பிக்குகள் முன்னணியினர் யப்பான் தூதரகத்திற்கு முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று நடத்தியுள்ளனர்.

நேற்று நண்பகல் நடத்தப் பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் நாட்டைப் பாதுகாக்கும் பிக்குகள் முன்னணியும் கலந்து கொண்டது. (வ)

STUDY IN INDIA
NRI INSTITUTE
AFFILIATED TO BANGALORE UNIVERSITY
RECOGNISED BY THE GOVERNMENT KARNATAKA AND APPROVED BY AICTE, NEW DELHI

SPOT ADMISSION

For The Academic Year 2003-2004

Admissions Are Opened For The Following Courses

Bachelor Of Computer Application	B.C.A 3 Years
Bachelor Of Business Management	B. B. M 3 Years
Bachelor Of Hotel Management	B. H. M 4 Years
B.Sc (Micro Biology)	3 Years
Bachelor Of Commerce	B. com 3 Years
Pre. University Course- Equivelent To A/L	

Eligibility

G. C. E. Exam. Conducted By The Dept Of Examinations Srilanka With Passes In.

a) 5 Subjects at the O/L and 2 subjects in A/L
OR
b) 4 Subjects at the O/L and 3 subjects in A/L

FOR DETAILS & ADMISSION

Contact,
Keshav V. R. Rao.
Director
NRI Institute (Bangalore)
INDIA

K. Ahilan
3/3P.T. De Silva M.W.
Dehiwala
TP- 01-737428
0777-173223

At- NO. 40, Kandy Road,
Old Park Chinese Restaurant
(OPP SLRC), Jaffna.
T.P. 0777-563569
Today 28.05.2003
Between 9.30 A.m and 7.00 P.m.

(6981)

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெய்

VoSoP ஐத் தேடி

தயாரிப்பாளர்

பரிமளா ஸ்ரோர்ஸ்

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

5-ம் தர புலமைப்பரீட்சை வினாத்தாள்-18

மாணவர் முழுப்பெயர்.....

பாடசாலையின் பெயர்.....

வீட்டின் முகவரி.....

மாணவர்களே! உங்கள் விடைகளை 04.06.2003க்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் இக்கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப் பகுதி
15,வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- மாணவர்களின் நலன் கருதி இவ்வினாத்தாளை வைத்துக்கொண்டு வினாக்களுக்கான விடைகளை மட்டும் வேறு ஒரு தாளில் எழுதிக் கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களைச் சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ல்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.